Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 03 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 13 (16.04.2003) புதன்கிழமை இதழ் :195

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி-754)

## இளைஞர்கள் கடத்தப்பட்டதன் எதிரொலி

# முஸ்லிம் தாய் தற்கொலையால் மூதூரில் பதற்றநிலை ஏற்பட்டது

## கண்காணிப்புக்குழு, படையதிகாரிகள் விரைவு

மூதூர் கடற்கரைச்சேனைப் பகுதியில், கடந்த மூன்றாம் திகதி- இரு முஸ்லிம் இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து, இளைஞர்களில் ஒருவரின் தாயார் நேற்று அதிகாலை நஞ்சருந்தித் தற்கொலை செய்துள்ளார்.

இச்சம்பவத்தினால், மூதூரில் தற்போது பதற்றநிலை ஏற்பட்டுள்ளது. இப்பெண்ணின் மரணச்சடங்கில் கலந்து கொள்ளச்சென்ற ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.எம்.மஹ்ரூப், அப்பகுதி இளைஞர்களால் தாக்கப்பட்டுள்ளார். முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஹக்கீம் பொதுமக்களால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட இரு முஸ்லிம் இளைஞர்களையும் விடுவிக்கும்வரை, இன்று முதல் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு மூதூர் முஸ்லிம் இளைஞர் அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இதேசமயம், இந்த இளைஞர்கள் கடத்தலுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

புலிகளின் திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் விடுத்த அறிக்கையில் - சமாதானத்தை விரும்பாத குழு ஒன்று, தமிழ் - முஸ்லிம் உறவைச் சீர்குலைக்க இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என்றும், நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்ட அத்தாயாரின் குடும்பத்திற்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவப் புலனாய்வாளர் மட்டுநகரில் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் நேற்றுக் காலை 7.55 மணிக்கு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் - இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் ஒருவர் பலியானார்.

படுகாயத்துக்குள்ளான இவர், ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டபோது அங்கு மரணமானார்.

பரமானந்தம் ரவிக்குமார் என்ற இவரை சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரில், ஒருவர் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ன தெரிவித்தார்.

சம்பவம் நடைபெற்ற புளியந்தீவு பிரதேசம், உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

### விண்ணாணம் விநாசியர்



அப்ப, பக்தாத்தைப் பிடிச்சாலும் இனி நிம்மதியில்லை எண்டு சொல்லுங்கோ

## இருமொழிமூல வினாத்தாள்கள் பெற அனுமதி

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஆங்கில மொழிமூலம் தோற்றும் பரீட்சார்த்திகள், தேவைப்படின் தமது தாய் மொழிமூலமான வினாப்பத்திரத்தை பரீட்சை மேற்பார்வையாளரிடம் பெற்றுக்கொள்ள பரீட்சைத் திணைக்களம் அனுமதியளித்துள்ளது. சுமார் ஆயிரம் பரீட்சார்த்திகள் இது தொடர்பாக விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே, இம் முடிவு (10 ஆம் பக்கம் பார்க்க)

# மீளக்குடியமர்ந்த வீடற்றவர்களுக்கு சிறானின் உதவியுடன் வீட்டுத்திட்டம்!

## கொழும்புத்துறை, குருநகர்ப் பகுதிகளில் அமையும்

(யாழ்ப்பாணம்)

**மீளக்குடியமர்ந்த வீடற்ற மற்றும் காணியற்ற மக்களுக்கு கொழும்புத்துறை, குருநகர்ப் பகுதிகளில் சகல வசதிகளுடனும்கூடிய பாரிய வீடமைப்புத் திட்டமொன்றை சிறானின் உதவியுடன் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற, சிறானின் யாழ்.மாவட்ட தேவை மதிப்பீட்டுக்குழுக் கூட்டத்தில், பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இவற்றில் - மீளக்குடியமர்ந்துள்ள வீடற்ற குடும்பங்களுக்கும், நீண்ட காலமாகவே காணிகள் இல்லாதவர்களுக்கும் - கொழும்புத்துறை, குருநகர்ப் பகுதிகளில் சிறானின் உதவியுடன் சகல வசதிகளும் கொண்ட ஒரு வீட்டுத்திட்டம் உருவாக்கப்படுதல் முக்கியமானதாகும். இதனடிப்படையில்- கொழும்புத் துறையில் 80 வீடுகளும், குருநகரில் 200 வீடுகளும் அமையும். இதற்கான பயனாளிகள்- கிராம அலுவலர், அரசசார்பற்ற நிறுவனங்கள மூலம் இனங்காணப்படவுள்ளனர்.

அத்துடன், குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுகின்ற தீவகப் பகுதிகளுக்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த சில குழுக்கள் இயங்குகின்றன

## விடுதலைப்புலிகள் கண்காணிப்பு குழுவிடம் முறையீடு

விடுதலைப் புலிகளுக்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பொன்று, நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையகமான கொக்கட்டிச்சோலைச் செயலகத்தில், நேற்று 12 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதில், தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் - மட்டக்களப்பு மாவட்ட ஊடகப் பேச்சாளரும், அரசியற் துறைத் துணைப் பொறுப்பாளருமான கிருசன் கலந்துகொண்டார்.

இங்கு அவர் குறிப்பிடுகையில்-

ஆரையம்பதி மற்றும் மட்டக்களப்பு போன்ற இடங்களில் நடைபெற்ற சம்பவங்களினால், விடுதலைப் புலிகளுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கில் சில குழுக் (10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் – கூட்டமைப்பு இவ்வாரத்தில் சந்திப்பர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும், தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமான சந்திப்பு இவ்வார இறுதியில் இடம்பெறவுள்ளது.

பெரும்பாலும், எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள இச்சந்திப்பில் - அண்மைக்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது.

# 45 அபிவிருத்தித் திட்டங்கள் யாழ். மாவட்டத்தில் அமுலாகும்

## அரசாங்க, புலிகள் தரப்பினர் இணக்கம்

சிறானின் யாழ். மாவட்டத் தேவை மதிப்பீட்டுக் குழுக்கூட்டம் நேற்றுக் காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெற்றது.


இக்கூட்டத்தில்- அரச தரப்புப் பிரதிநிதியாக அரச அதிபர் செ.பத்மநாதனும், விடுதலைப் புலிகள் சார்பில் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும் இணைத் தலைவர்களாகத் தலைமைதாங்கினர்.

கடந்த தை மாதம் நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் - யாழ். மாவட்டத்தில் இனங்காணப்பட்ட தேவைகள் குறித்தும், அது தொடர்பாக விபரங்கள் அடங்கிய திட்டமும் இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளும் அரசாங்கத் திணைக்களங்களும் இணைந்து, கிளிநொச்சி சிறான் அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் ஆராய்ந்த விடயங்கள், செயற்பாடுகள் சிறானின் அனுமதியுடன், நிதி கிடைத்த பின்னர் - முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டங்களின் அடிப்படையில் அமுல்படுத்தப்படும்.

அத்துடன், ஐக்கியநாடுகள் அபிவிருத்தி நிறுவனம், யு.என்.எச்.சி.ஆர், யுனிசெப், போரூட் போன்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் அமுல்படுத்தப்படும் திட்டங்கள், மாவட்டக் குழுக்களுக்கு தகவல்களுக்காக அனுப்பப்பட வேண்டும் என இக்கூட்டத்தில் முன்மொழியப்பட்டது.

கல்வி, சுகாதாரம், கால்நடை, கிராம அபிவிருத்தி, போக்குவரத்து, விவசாயம், மீன்பிடி, மீளக்குடியமர்வு, சமூகசேவைகள் ஆகிய துறைகளின் கீழ் 65 திட்டங்கள் சமர்ப் (10 ஆம் பக்கம் பார்க்க)




பக்தாத்தில் நேற்று ஆரம்பித்த அமெரிக்க எதிர்ப்புப் பேரணி.

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
(சி-730) 01-505632, 074-61265

### யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி வலயங்களின்

# ஆசிரிய நூலகர்களுக்கான செயலமர்வு நாளை நெல்லியடியில் ஆரம்பமாகிறது!

அதிபர்களினால் சிபார்சு செய்து அனுப்பப்பட்ட ஆசிரிய நூலகர்களுக்கான ஐந்துநாள் செயலமர்வு- வடமராட்சி, தென்மராட்சி மற்றும் யாழ்ப்பாண வலயத்தின் சில பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு, நாளை தொடக்கம் 21 ஆம் திகதிவரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் - நூலகமும் தகவல் விஞ்ஞானத்திற்குமான தேசிய நிறுவகத்தின் அனுசரணையுடன், கொழும்பு தேசிய நூலகம், மாகாணக் கல்வித்திணைக்களம், யாழ்.பல்கலைக்கழக வளவாளர்களினால் மு.ப. 8.30 மணி தொடக்கம் பி.ப. 5 மணிவரை மேற்படி பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இப் பயிற்சிநெறிகளில், பின்வரும் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு, மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ்.வலயத்தைச் சேர்ந்த- ம.சத்தியகுமார் (பெரியபுலம் மகாவித்தியாலயம்), எஸ்.புவனேஸ்வரன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), எஸ்.அமரசிங்கம் (இடைக்காடு மகா வித்தியாலயம்), கே.ஜெகதீஸ்வரன் (கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்), திருமதி ஜே.நவலோகநாதன் (புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி), திருமதி ரி.ரவீந்திரநாதன் (செங்குந்தா இந்துக்கல்லூரி), வி. ஜெயராஜ் (முத்துத்தம்பி இந்துக் கல்லூரி), ரி.சயந்தி (கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), திருமதி. சி.ஞானப்பிரகாசம் (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஒ.ஜெகதீஸ்வன் (யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை), எஸ்.கனகராஜா (கொக்குவில் ஞான பண்டித வித்தியாலயம்) ஆகியோரையும்,

வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த- மா.ஜெயகீதா (நாகர்கோயில் மகா வித்தியாலயம்), வே.பரமேஸ்வரன் (ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை), இ.சிறிதரன் (ஞானசாரியார் கல்லூரி), அ.அசோகலிங்கம் (தேவரையாளி இந்துக்கல்லூரி), ம.அ. தனரத்னராஜா (வதிரி திரு இருதயக்கல்லூரி), வே.உதயமோகன் (உடுத்துறை மகாவித்தியாலயம்), க.யோகேஸ்வரன் (செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை), செல்வி இ.நடராஜா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), த.செபநேசன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), க.உதயமூர்த்தி (விக்னேஸ்வராக் கல்லூரி), க.சண்முகதாஸ் (சிதம்பராக் கல்லூரி), அ.மோசஸ் தேவரத்தினம் (ஹாட்லிக் கல்லூரி), போ.குணசேகரம் (பொலிகண்டி இந்து த.க.பாடசாலை). திருமதி கீ.கிரிதரன் (இமையாணன் அ.த.க.பாடசாலை), க.சிறீஸ்குமார் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), க.சரவணபவன் (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), திருமதி ஜே. சிவநேசன் (தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), திருமதி பு.சிவசெந்திநாதன் (புற்றளை மகாவித்தியாலயம்), சி.விக்னேஸ்வரன் (வல்வை மகளிர் கல்லூரி), திருமதி ப.குழந்தைவேல் (கம்பர்மலை அ.த.க.பாடசாலை), திருமதி ஆ.நாகேந்திரன் (கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்), வி.மகேஸ்வரி (புலோலி மெ.மி.த.க. பாடசாலை), செல்வி செ. சேனாதிராஜா (வடஇந்து மகளிர் கல்லூரி),

தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த - திருமதி ம.தனபாலசிங்கம் (மிருசுவில் அ.த.க.பாடசாலை), செ. குணரத்தினம் (மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்), திருமதி சி.சுசிலா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), சி.பரமேஸ்வரன் (வரணி மகாவித்தியாலயம்), திருமதி ஞா.கனகராசா (விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்), திருமதி க.ரவிராஜ் (மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்), ம.ரகுநாதன் (கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம்), ந.ரஞ்சிதா (மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்), திருமதி ந.ஸ்ரீராசா (எழுதுமட்டுவாள் ஸ்ரீகணேச வித்தியாலயம்), ம.சுதமதி (சாவகச்சேரி இந்துக்கல்லூரி) ஆகிய ஆசிரியர்களையும்,

அதே வலயத்தைச் சேர்ந்த - உசன் ராமநாதன் மகாவித்தியாலயம், கொடிகாமம் அ.த.க பாடசாலை, நாவற்குழி மகாவித்தியாலயம், கச்சாய் அ.த.க. பாடசாலை, மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரிய நூலகர்களையும் கலந்துகொள்ளச் செய்யுமாறு அதிபர்கள் கேட்கப்படுகின்றனர்.

பங்கு பற்றுபவர்களுக்கு உணவு, தங்குமிடம், கொடுப்பனவுகள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொலிஸாரின் வீதிச் சோதனை அதிகரிப்பு

கடந்த சில நாட்களாக, யாழ்.- பருத்தித்துறை வீதியின் பல இடங்களிலும் பொலிஸார் வீதிச் சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொலிஸார்- வாகன அனுமதிப் பத்திரம், வாகன வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் என்பனவற்றையும் பரிசோதிப்பதுடன் - வாகனங்களில் அளவுக்கதிகமாகவும், மிதிபலகைகளிலும் மக்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களின் சாரதிகளிடமிருந்து தண்டப்பணமும் அறவிட்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுவரும் வீதி விபத்துக்களைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (34)

## கணினி கருத்தரங்கு

நமது ஈழநாடு பத்திரிகை நிறுவனமும் எஸ்.ரி.பி. கணினி நிறுவனமும் இணைந்து நடாத்தும் மாபெரும் இலவச கணினிக் கருத்தரங்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இன்று காலை 10 மணி முதல் ஒரு மணிவரை நடைபெறவுள்ளது.

## புதிய கண்காணிப்புக்குழு அமைக்கக் கோரிக்கை

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தலைவர் ஜெனரல் ரெலவ்சன் மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏனைய உறுப்பினர்களை நீக்கி, பல உலக நாடுகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதான புதிய குழு ஒன்றை நியமிக்குமாறு- ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ், புளோட், ஆகிய இயக்கங்கள் அரசாங்கத்தைக் கேட்டுள்ளதாக 'திவயின' செய்தி வெளியிட்டுள்ளது.

தாங்கள் செய்யும் முறைப்பாடுகளைக் கவனிப்பதில்லை என்றும் இந்த இயக்கங்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மீது குற்றஞ்சாட்டியுள்ளன என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அராலியில் வீதி திருத்தப்படவுள்ளது

தொல்புரம் கமநல அபிவிருத்தி நிலையத்திற்குட்பட்ட, அராலி மேற்குப் பகுதியில்- ஒரு மைல் நீளமான அரசடி நொச்சிக்காட்டுப் பிள்ளையார் வீதி, இவ்வாண்டு திருத்தப்படவுள்ளதாக கமநல அபிவிருத்தித் திணைக்கள தொழில் நுட்ப உத்தியோகத்தர் ரி.ஆனந்தராசா தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற, தொல்புரம் விவசாய சம்மேளனங்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.


யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்றத்தினரின் முகாமைத்துவ நோக்கு சஞ்சிகை வெளியீட்டிற்காக யாழ்.முன்னணிக் கலைஞர்களுடன் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து வழங்கும்.

சித்ர கானங்கள்

காலம் :- 16-04-2003 (புதன்கிழமை - இன்று)

நேரம் :- 9.30 A.m, 2.30 Pm புதிய நேரம்

இடம் :- கைலாசபதி கலையரங்கு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முகாமைத்துவ மாணவர் மன்றம்.

ஊடக அனுசரணை நமது ஈழநாடு


## இன்றைய நாள் இனிய நாள்

**16-04-2003 - புதன்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- தர்மகாரிய சித்தி, பொருட்சேதம், இனசன விரோதம், வாக்குக் கலகம். |
| இடபம் | :- பிரயாசைமிகுதி, தொழில் குறைவு, பணப் பற்றாக்குறை, இனசனக் கவலை. |
| மிதுனம் | :- சத்துரு ஜெயம், காரிய சித்தி, நன்மதிப்பு, நற்குணவிருத்தி, பெரியோர் மதிப்பு. |
| கர்க்கடகம் | :- வாகனலாபம், புத்திர களஸ்திர மகிழ்ச்சி, நன்மதிப்பு, தொழில்சிறப்பு. |
| சிங்கம் | :- வாக்கு வசீகரம், பணவரவு, குடும்ப மகிழ்ச்சி, காரிய வெற்றி. |
| கன்னி | :- பிரயாசை மிகுதி, தனலாபம், சிநேகித நன்மை, களஸ்திர சுகம், தனவிருத்தி. |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- இடையூறு, ஏமாற்றம், சோம்பல், மனக்கவலை, சத்துரு பீடை. |
| விருச்சிகம் | :- குடும்பானுகூலம், சிநேகலாபம், தனதானிய விருத்தி, புத்திரசுகம். |
| தனு | :- தேக மெலிவு, பிரயாணக் கஷ்டம், சத்துருபயம், பொருட்சேதம், |
| மகரம் | :- களஸ்திர புத்திர மகிழ்ச்சி, புதிய ஸ்தானம், இல்லச் சிறப்பு, வாகனலாபம். |
| கும்பம் | :- இல்லச்சிறப்பு, காரியவெற்றி, தருமகாரிய சித்தி, அதிகாரவெற்றி, சந்தோஷமிகுதி. |
| மீனம் | :- வீண்பழி, விபத்து, பிரயாணக் கஷ்டம், பந்து விரோதம். |


ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

சரத்குமார் (இருவேடம்), சிம்ரன், ரோஜா, வடிவேல் நடித்த

அரசு

10.30, 2.30, 6.30, 9.30

(சி-732)

நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜயகாந், சிம்ரன் நடித்த

ரமணா

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

URASSIC PARK 3

(சி-731)



உ
சிவமயம்

தசாக கிரகயக்ஞ அழைப்பிதழ்

சித்திரபானு வருடம் பங்குனி மாதம் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (08.04.2003) அன்று சிவபதமடைந்த

திருமதி கணேசஐயர் - கோமதி அம்மா

அவர்களின் ஆத்மசாந்தி வேண்டி கிரியைகள் கீழ்வரும் திகதிகளில் நடைபெற இருப்பதால் தாங்கள் வந்து பங்குபற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

17.04.2003 வியாழக்கிழமை காலை 9மணி - தசாகம் (அந்தியேஸ்டி)
18.04.2003 வெள்ளிக்கிழமை - ஏகோதிஸ்டம்
19.04.2003 சனிக்கிழமை - சபிண்டீகரணம்
20.04.2003 ஞாயிற்றுக்கிழமை - கிரகயக்ஞம்
(12மணி ஆத்மசாந்தி மதியபோசனம்)

பிள்ளைகள்:
சிவஸ்ரீ. பூரணக்குருக்கள்
பிரமஸ்ரீ. வீரமணிஐயர்
பிரமஸ்ரீ. நாகேஸ்வரசர்மா
கேசவசர்மா
அகிலேஸ்வரசர்மா

மருமக்கள்:
பிரமஸ்ரீ. கிருஷ்ணர் குடும்பத்தினர்
பிரமஸ்ரீ. ஜெகதீஸ்வரர் குடும்பத்தினர்
சிவஸ்ரீ. சபாரத்தினசர்மா குடும்பத்தினர்
பிரமஸ்ரீ. சண்முகநாதசர்மா குடும்பத்தினர்
பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்.

இந்திர அம்மன் கோவிலடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி. (312)





நமது ஈழநாடு பத்திரிகை நிறுவனமும் STP கணனி நிறுவனமும் இணைந்து நடாத்தும்

மாபெரும் இலவச கணனிக் கருத்தரங்கு

இடம்: சாவகச்சேரி இந்துக் கல்லூரி

காலம்: 16.04.03, புதன் கிழமை


நேரம்: காலை 10.00 மணி தொடக்கம் 01.00 மணி வரை

கணனி ஓர் அறிமுகம், மென்பொருட்கள், வன்பொருட்கள், அரசின் கனனிக் கல்வித் திட்டம், இணையம், நவீன வரவுகள்

நமது ஈழநாடு

பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

# நிதியுதவிகளோடு மட்டும் நின்றுவிடாமல் சமாதான முயற்சிகளை ஊக்குவிக்க வேண்டும்



## அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஆர்மிரேஜ் கோரிக்கை

சர்வதேச நாடுகள் இலங்கைக்கு நிதியுதவிகளை வழங்குவதுடன் மட்டும் நின்றுவிடாமல், சமாதான முயரசிகளை ஊக்குவிப்பதிலும் கூடிய கவனம் செலுத்தவேண்டுமென அமெரிக்க ராஜாங்க அமைச்சர் றிச்சார்ட் ஆர்மிரேஜ் கேட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் வொஷிங்ரனில் ஆரம்பமான இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடிக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து, ஆரம்ப உரையாற்றியபோதே ஆர்மிரேஜ் இந்தக் கோரிக்கையை விடுத்தார். இந்தக் கூட்டத்திற்கு அமைச்சர் மிலிந்த மொறகொடவும், றிச்சார்ட் ஆர்மிரேஜும் இணைந்து தலைமை தாங்கினர்.

இலங்கையின் சமாதான முயற்சிகள் வெற்றிபெறவேண்டும். 20 வருடங்களாக நீடித்த பேரினால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து போய் விட்டது. சிதைந்துபோன நாட்டினை மீளக்கட்டியெழுப்புவதே இந்த மாநாட்டின் நோக்கமாகும். தற்போது அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுக்கள் முன்னேற்றகரமான வகையில் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்தப் பேச்சுக்கள்மூலம் இலங்கையின் இன நெருக்கடிக்கு உகந்த தீர்வு எட்டப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இதற்குச் சர்வதேச சமூகத்தின் ஆதரவு அவசியமாகும். வொஷிங்ரனில் நடைபெறும் இந்த மாநாட்டுக்கு புலிகள் அழைக்கப்படவில்லை. புலிகள் இயக்கத்தை அமெரிக்கா - பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் இணைத்துள்ளது.

புலிகள் சொல்லிலும், செயலிலும் வன்முறைகளைக் கைவிடுவதாகப் பிரகடனம் செய்யவேண்டும். புலிகள் பயங்கரவாதச் செயல்களைக் கைவிடுவதாகப் பிரகடனம்செய்தால் தடையை விலக்குவது பற்றி ஆலோசிக்க முடியும். அண்மைக் காலத்தில் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து அமெரிக்கா தெளிவான கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளது. இந்தநிலையைப் புலிகள் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்றும் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் மேலும் தெரிவித்தார்.

(க)

### விடியோ படக்காட்சி

பிரசாந்தியில் பட்டமளிப்பு விழா, இந்திய ஜனாதிபதி சாயிபாபாவுடன் சந்திப்பு மற்றும் 2002 ஆம் ஆண்டு மகளிர் தின விழா, ஸ்ரீ கிருஷ்ணா கீதை உபதேசம் ஆகியவற்றை உள்ளடக்கிய விடியோ படக்காட்சி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள சாயிசேவா நிலையத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

### செஞ்சிலுவையுடன் தொடர்புகொள்ள கோரிக்கை

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவுடன், கீழே பெயர் குறிப்பிடப் பட்டிருப்பவர்கள் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஜெயசிங்கம் மரியநாயகி (கரம்பன் மேற்கு, ஊர்காவற்துறை),மணிமாறன் ரதிதேவி (மே/பா.முத்துலிங்கம், நீர்வேலிச் சந்தி, பருத்தித்துறைவீதி, நீர்வேலி), முத்துசாமி தமிழ்தாசன் (மே/பா.எஸ்.பாக்கியராசா, 17/1 நாவலடி ஒழுங்கை, வண்ணார்பணணை), இரத்தினவடிவேல் இராமநாதன் (நெடியகாடு, வல்வெட்டித்துறை), ஞானரத்தினம் கலைவாணி (வாரிவளவு, காரைநகர்) - ஆகியோரே தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# பாகிஸ்தான் படை அதிகாரிகள் குழு முப்படைத் தளபதிகளுடன் சந்திப்பு!

(கொழும்பு)

கொழும்புக்கு வந்துள்ள பாகிஸ்தான் படையதிகாரிகள் குழு - பாதுகாப்பு அமைச்சர் மற்றும் முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை 14 பேர் கொண்ட இராணுவ அதிகாரிகள் குழு, பாகிஸ்தானிலிருந்து கொழும்பு வந்திருந்தது. மேஜர் ஜெனரல் முஹமட் சித்திக் தலைமையிலான இந்தக் குழுவில், பாகிஸ்தான் இராணுவக் கடற்படை, விமானப்படை அதிகாரிகள் இடம்பெற்றிருந்தனர் .

இவர்கள் - முப்படைத் தளபதிகளையும் சந்தித்து, இங்குள்ள பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்தும் விரிவான பேச்சுக்களை நடத்தியிருந்தனர். அத்துடன், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ ஆகியோருடன் -

முப்படைகளும் இணைந்து செயற்படுவது, ஒத்துழைப்புக்களை அதிகரிப்பது மற்றும் பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடினர். முக்கிய படைத் தளங்கள் சிலவற்றுக்கும் இவர்கள் விஜயம் செய்துள்ளனர்.

# சார்ஸ் நோயாளி ஒருவர் கட்டுநாயக்கவில் தடுப்பு

சிங்கப்பூரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்த 'சார்ஸ்' நோயாளி ஒருவர் நேற்றுமுன்தினம் கண்டுபிடிக்கப் பட்டார்.

சிங்கப்பூர் நாட்டவரான இவர், விமானமூலம் கொழும்பு வந்திருந்தார். விமானநிலைய அதிகாரிகள் இவர்மீது சந்தேகங்கொண்டு பரிசோதனைகளை மேற்கொண்ட போது - மேற்படி நபருக்குச் 'சார்ஸ்' நோய் தொற்றியிருப்பது தெரியவந்தது. இதையடுத்து இவரையும், இவருடன் விமானத்தில் கூடவந்த ஐம்பது பேரையும் விமான நிலையத்துக்கு வெளியில்செல்ல அதிகாரிகள் அனுமதி வழங்கவில்லை எனவும் தெரியவருகிறது.

# இலங்கையின் அரசியலில் பெண்களுக்கு 25 வீதம் இடம்

## ஐ.நா. மனித உரிமைக் கூட்டத்தில் உரை

(கொழும்பு)

இலங்கை அரசியலில் பெண்களுக்கு இருபத்தைந்துவீத இடங்களை வழங்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக் குழுவின் கூட்டத்தில் உரையாற்றிய இலங்கைப் பிரதிநிதி பிரசாத் காரியவசம் தெரிவித்தார்.

இலங்கையில், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறைவடைந்து வருகின்றன. ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுச் சுதந்திரமாக இயங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் பற்றிய பொறுப்புணர்வை மக்கள் மத்தியில் சட்டங்கள் மூலம் ஏற்படுத்த முடியாது. அது ஒவ்வொரு மனிதனுக்குள்ளேயிருந்தும் உருவாக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அமெரிக்க - இலங்கை

# சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்தாகும்!

அமெரிக்காவுடன், இலங்கை அரசாங்கம் அடுத்த வருட முற்பகுதியில் சுதந்திரவர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் என்று வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கும், இலங்கைக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் பற்றிய இறுதித் தீர்மானம் விரைவில் எடுக்கப்படும். இதற்கான முயற்சிகள் இடம் பெற்றுவருகின்றன.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்வதற்காக அமெரிக்கா பதினொரு நாடுகளின் பட்டியலைத் தயாரித்துள்ளது. இதில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது.

எனவே, அடுத்த வருட முற்பகுதியில் இலங்கை - அமெரிக்க சுதந்திரவர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன என அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார்.

# திருமலையில் பொங்குதமிழ் ஜூன் மாதம் நடத்தத் திட்டம்

(திருகோணமலை)

எதிர்வரும் ஜூன் மாதத்தில் பொங்குதமிழ் நிகழ்வை திருகோணமலையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

தமிழர் தாயகத்தின் அனைத்துப் பகுதி மக்களையும் ஒன்றிணைத்து மிகப்பிரமாண்டமான வகையில் இந்தப் பொங்குதமிழ் நிகழ்வை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வை நடத்துவது தொடர்பாக ஆராயவும், ஏனைய விடயங்கள் குறித்து கலந்துரையாடவும் இன்று திருகோணமலை கலாசார மண்டபத்தில் கூட்டம் ஒன்றுக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(க)

### கலை பண்பாட்டுக் கழகத்தின் மாபெரும் தமிழிசை மாலை

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகம் இன்று மாலை 4 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மிகப்பெரியளவில் 'தமிழிசை மாலை' என்னும் கலை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது. இதில் தமிழகத்தின் பிரபல பாடகி ரீ.கே.கலா கலந்துகொண்டு தமிழிசைப் பாடல்களை இசைக்கவுள்ளார்.

# உயர்கல்வித் தரத்தை அதிகரித்து வேலைவாய்ப்பு வழங்கத் திட்டம்

உயர் கல்வித்தரத்தை உயர்த்தி தொழில் வாய்ப்புக்களை உருவாக்க இவ்வருடம் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதற்கான திட்டங்கள் உலக வங்கியுடன் இணைந்து உருவாக்கப்படவுள்ளன. இது தொடர்பாக ஆராய்வதற்குத் திறைசேரிச் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், உலகவங்கிப் பிரதிநிதிகள் ஆகியோர் அடுத்த வாரம் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இத்திட்டத்துக்குக்கமைய பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறும் மாணவர்களுக்குக் கணினி, ஆங்கில வகுப்புக்கள் நடத்தப்பட்டு தொழில் வாய்ப்புக்களை உடனடியாகப் பெறககூடியவர்களாக உருவாக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

### விடுமுறைக் கால இலவச ஓவியப் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்திலுள்ள ஐ.ஏ.ரீ. சித்திரப் பயிற்சி நிறுவனம் நடாத்தும் விடுமுறைக் கால இலவச ஓவியப் பயிற்சிப் பட்டறை இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகி - எதிர்வரும் 19 ஆம் திகதி வரை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மாணவர்கள் மத்தியில் ஓவிய அறிவை வளர்க்கும் முகமாக இளம் ஓவியக் கலைஞர்களை ஒன்றிணைத்து நடாத்தப்படவுள்ள இப் பயிற்சிப்பட்டறையில், ஆர்வமுள்ளவர்களைப் பங்குபற்றிப் பயன்பெறுமாறு நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.

### அல்வாயில் பூரணை உற்சவம்

(நவிண்டில்)

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் இன்று சித்திரைப் பூரணை உற்சவம் நடைபெறுமென தேவஸ்தானப் பரிபாலனசபையினர் தெரிவித்தனர். (116)



வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்துக்கு ஒருதொகுதி பாண்ட் வாத்தியக் கருவிகளை அமைச்சர் மகேஸ்வரன், பாடசாலை அதிபர் ந.சிவராஜாவிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

# சர்வதேச சமூகத்தின் ஆதரவின்றி பொருளாதார அபிவிருத்தி இல்லை

## வொஷிங்ரன் மாநாட்டில் அமைச்சர் மிலிந்த

சர்வதேச உதவிகளின்றி இலங்கையில் பொருளாதார அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியாது என்று அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார்.

வொஷிங்ரனில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இணைத் தலைமையுரையாற்றியபோதே அமைச்சர் மிலிந்த மொறகொட இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை - பொருளாதார ரீதியாகப் பல்வேறு சவால்களை எதிர்கொண்டிருக்கிறது. கண்ணிவெடிகளை அகற்ற வேண்டியுள்ளது. சுமார் பத்து இலட்சம் கண்ணிவெடிகள் மக்கள் குடியிருப்புக்களில் புதைக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றைவிட - மீள்குடியமர்வு, நகர அபிவிருத்தி போன்ற பல பிரச்சினைகள் உள்ளன. இவற்றை சர்வதேச நாடுகளின் நிதியுதவிகளுடனேயே நிறைவேற்ற முடியும் என்றும் அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார்.

# 'சுபானு' புத்தாண்டு உங்களுக்கு எப்படி

## ரிஷபம்

கார்த்திகை 2 ஆம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிடம்

அதிபதி கிரகம்:— சுக்கிரன்

உங்கள் விசேட தனித் திறன்கள்: இனிமையாகப்பேசி பிறரைக் கவரும் வாக்குச் சாதுரியம், கவலையில் கூட இன்முகம் காட்டும் கவர்ச்சி, சிற்பம், நாட்டியம், சுற்றுலா செல்வது, அழகு, சுத்தம், அலங்காரம் ஆகியவற்றில் ரசிகத் தன்மை, தாராள மனப்பான்மை, பிறருக்கு உதவுவதில் தீவிரம்.

**உங்கள் பலவீனம்:**

சக்திக்கு மீறிச் செலவு செய்தல், நிறைவேற்ற இயலாத வாக்குறுதிகளை அளித்துவிட்டு அதனால் சிரமப்படுவது, உலகச சுகங்களிலும், பெண்களிடமும் ஈடுபாடும் அதனால் உடல்நலனைக் கெடுத்துக் கொள்ளும் வாய்ப்புகள்.

**புத்தாண்டுப் பலன்கள்:**

**14.04.2003. முதல்**
**16.08. 2003 வரை.**

குடும்பம் : ஜென்ம ராசியில் ராகு - சனி சேர்க்கை, திருதீய ஸ்தானமாகிய மூன்றாம் இடத்தில் குரு ஆகிய முக்கியக் கிரக நிலைகளுடன் சுபானுப் புத்தாண்டு உங்களுக்கு உதயம் ஆகியுள்ளது. 21.05.2003 அன்று ஆயுள், ஜீவனம் ஆகியவற்றிற்கு சனி பகவான் மிதுன ராசிக்கு - அதாவது உங்கள் ராசிக்கு வாக்கு, தனம், குடும்பம் ஆகியவற்றையும் குறிக்கும் இடத்திற்கு மாறுகிறார். ஜூலை மாதம் கடைசி வாரத்தில் குரு பகவானும் உங்கள் ராசிக்கு சுகஸ்தானமாகிய சிம்மராசிக்கு மாறுகிறார். ஜென்மராசியிலிருந்து சனிபகவான் விலகுவது, ஒரு விதத்தில் நன்மையே. ஜோதிடக் கலையின் கோச்சார விதிகளின்படி - சனி, மிதுனராசியான இரண்டாம் இடத்திற்கு மாறுவதனால், நன்மை ஏதுவும் ஏற்படாது. ஆனால், ஜென்ம ராசியில் சனி இருப்பதைவிட இரண்டாமிடத்தில் இருப்பது ஒருவகையில் அனுகூலமே. ஜென்ம ராசியில் சனி இருக்கும்போது மனம் அதிக வேகமாக வேலை செய்யும். அதனால், எதையும் நிதானத்துடன் ஆராய்ந்து யோசித்து முடிவு எடுக்காமல், அவசர முடிவுகளில் கொண்டு விடுவதுடன், அதனால் பிரச்சினைகளையும் ஏற்படுத்தியிருக்கும். ஜென்மராசியை விட்டு சனி விலகுவதால, இதுவரை இருந்துவந்த அவசர புத்தி இனி இருக்காது. மேலும் நிம்மதி இல்லாமல் தினமும் அலைபாய்ந்த மனதில் இனி ஓரளவு அமைதி உண்டாகும்.

ஆனால், மிதுனம் உங்கள் ராசிக்கு வாக்கு, தனம், குடும்ப ஸ்தானம் ஆயிற்றே! ஆதலால், ஜென்மராசி சனியுடன் ஒப்பிடும் போது, மிதுனராசி சஞ்சாரம் பரவாயில்லை என்பதே தவிர, மிதுன சஞ்சாரமும் வேறுவிதங்களில் சிரமங்களை அளிக்கக்கூடிய கிரக நிலையே ஆகும். இதுபோன்றே, ஜூலை கடைசி வாரம்வரை உங்கள் ராசிக்குத் திருதீய ஸ்தானமாகிய கடகத்தில் குரு சஞ்சரிப்பதும் நல்லதல்ல. முக்கியமாகப் பணவிஷயங்களில் நீங்கள் மிகமிக எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். கைப்பணத்தை எண்ணி எண்ணிச் செலவழிக்க வேண்டும். எக் காரணத்தைக் கொண்டும் கடன் வாங்குவதைத் தவிர்க்கவும். தன ஸ்தானத்தில் பாவக் கிரகங்கள் சஞ்சரிக்கும் போது ஏற்படும் கடன் பலமடங்கு வளரும் எனவும், எளிதில் அடைபடாது எனவும் மிகப் புராதனமான ஜோதிட நூல்கள் வற்புறுத்தி விளக்கியுள்ளன. பிறருக்காகக் கையெழுத்துப் போடுவது, கடன் வாங்கிப் பிறருக்கு உதவி செய்வது ஆகியவற்றைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும்.

குடும்பத்திலும் பல பிரச்சினைகளை நீங்கள் இந்தக் காலகட்டத்தில் சந்திக்க வேண்டிவரும். சிறு விஷயங்களுக்குக் கூட கருத்து வேற்றுமை உண்டாகும். வாக்கு ஸ்தானத்தில் சனி இருப்பதால் எவரிடமும் கடுமையாகப் பேசாமல் இருப்பது மிகவும் அவசியமாகும். நிதானத்தை இழந்தால், குடும்பத்தில் பகைமை வளரக்கூடும் எனக் கிரகநிலைகள் எச்சரிக்கை செய்கின்றன. குடும்பப் பிரச்சினைகளினால் மனதில் வெறுப்பும், விரக்தியும் வளரும். கணவர் - மனைவியரிடையே அன்னியோன்னியம் பாதிக்கப்படவும் சாத்தியக்கூறு உள்ளது. பெண்கள், பிள்ளைகள் ஆகியோர் உங்கள் கருத்துக்கு முரண்பாடாக நடந்து கொள்ளக்கூடும்.

**உத்தியோகம், தொழில், வியாபாரம்.**

வேலை பார்க்கும் இடத்தில் நிம்மதியற்ற சூழ்நிலை நிலவும். மேலதிகாரிகள், சக ஊழியர்களுடன் வாக்குவாதமும், பகை உணர்ச்சியும் மேலிடும். உங்களுக்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத, பிறர் செய்யும் தவறுகளுக்கு நீங்கள் பொறுப்பு ஏற்கநேரிடும். நீங்கள் இதை அறிந்து கவலைப்படக்கூடும். இதனை நாங்கள் கூறியிருப்பதற்குக் காரணம் - நீங்கள் இத்தகைய கிரகநிலைகள் அமையும் காலகட்டத்தில், வேலை பார்க்கும் இடத்தில் ஜாக்கிரதையாக இருத் தல் அவசியம் என்பதை வலியுறுத்துவதற்காகவே. வெள்ளம் வரும் முன் அணை போடுவது விவேகம் அல்லவா! முக்கியமாக, வெளிநாடுகளில் வேலை பார்த்துவரும் ரிஷபராசி அன்பர்களுக்கு அடிக்கடி வேலையை விட்டுவிட வேண்டும் என்ற தீவிர எண்ணம் ஏற்படும். எந்தச் சூழ்நிலை ஆனாலும் எதையும் நிதானத்துடன் தீர ஆராய்ந்து முடிவெடுக்கவும், பணப் பொறுப்பிலுள்ள அதிகாரிகள் - அலுவலக விதிமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கவும்.

தொழிற்துறையினருக்குப் பல வித சிரமங்கள் ஏற்படக் கூடும். கட்டடங்கள் கட்டும் மற்றும் இதர ஒப்பந்தகாரர்கள், புதிய ஒப்பந்தங்களை ஏற்பதற்கு முன்பு ஒப்பந்தத்தின் சரத்துக்களைத் விரிவாகப் படித்து, அவற்றை ஆழ்ந்து புரிந்து கொண்டு, அதன்பின்னரே அவற்றை ஒப்புக்கொள்வதா அல்லது நிராகரிப்பதா என்பதைத் தீர்மானிப்பது நல்லது. உற்பத்திக்கு அவசியமான அடிப்படைப் பொருட்கள் கிடைப்பதில் தடங்கல்கள் ஏற்பட்டு, உற்பத்தி குறையக்கூடும். வியாபாரிகளுக்கு - உழைப்பிற்கு ஏற்ற விற்பனை இராது. போட்டிகளும், சக வியாபாரிகளுடன் விரோதமும், கூட்டாளிகளின் மறைமுகச் சூழ்ச்சிகளினால் மனவேதனையும் ஏற்படும். கடன் வாங்கி புதிய முதலீடுகள் செய்வது, வியாபாரத்தை அபிவிருத்தி செய்ய முயற்சி செய்வது ஆகியவற்றைக் கண்டிப்பாகத் தவிர்த்தல் வேண்டும்.

**அரசியலில் ஈடுபடுவோர்**

ஆம்! உங்களுக்குத்தான் விசேஷ அறிவுரை அவசியமாகிறது. இத்தருணத்தில் ஜென்ம ராசியில் ராகு, வாக்கு ஸ்தானத்தில் சனி, வேறு என்ன வேண்டும். கட்சித் தலைமையின் மனதைக் கெடுப்பதற்கு உங்களைப் பற்றித் தவறாகக் கோள்சொல்வதும், கட்சியில் இதுவரை நண்பர்கள் போல இருந்து வந்தவர்கள் எதிரிகளாக மாறுவதும், கட்சியில் செல்வாக்குக் குறைவதும் தற்போதுள்ள கிரக நிலைகளினால் ஏற்படும் சிரமங்களில் சில. இவற்றை எப்படிச் சமாளிப்பது. முக்கிய விஷயங்களில் தற்காலிகமாக மௌனம் சாதிப்பதே நல்லது. அதனால், வீண் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். சிலருக்கு அரசாங்கத்தாலும், காவற்துறையினராலும் பிரச்சினைகள் ஏற்படக்கூடும். எதிலும் நிதானம், பொறுமை வேண்டும். தசா புக்திகள் மிகக்கடுமையாக இருப்பின் கட்சியை விட்டு விலகநேரிடும்.

**மாணவமணிகள்**

படிப்பில் நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். அடிக்கடி ஞாபகத்திறனும், கிரகிப்புச் சக்தியும் பாதிக்கப்பட்டு பின்பு சரியாகும். உடலில் சோம்பல் அதிகமாகும். வெளிநாடுகளில் விசேட உயர் கல்வி படித்துவரும் மாணவ மாணவியருக்குத் தங்களது கல்வியை முடிப்பதில் தடங்கலும், தாமதமும் உண்டாகும். கல்விச் சலுகைகள் குறையும். தாய், தந்தையர், உறவினர் பற்றிய நினைவும், கவலையும் மனத்தை அரிக்கும். அதனால், பாடங்களில் மனத்தை முழுமையாக ஈடுபடுத்துவது கடினமாக இருக்கும்.

**தமிழ்நாட்டின் பிரபல சோதிட சக்கரவர்த்தி**
**ஏ.எம்.இராஜகோபாலன்**

**விவசாயத்துறையினர்**

உங்களுக்கும் நன்மை செய்யும் கிரகங்கள் பலம் குறைந்தும், சிரமங்களை அளிக்கும் கிரகங்கள் பலமாகவும் உள்ளனர். ஆதலால், பாடுபட்ட அளவிற்கு விளைச்சல் இராது. பழைய கடன்களும் தொல்லை தரும். அரசாங்கச் சலுகைகளை எதிர்பார்ப்பதிலும் பயனிராது. எதிர்பார்த்து, முயற்சி செய்து வந்த வங்கிநிதி உதவிகள் கிடைப்பது கஷ்டம். வருமானமும் - வரவிற்கும் செலவிற்கும் சரியாகும்படியாகவே இருக்கும்.

**பெண்மணிகள்**

வரும் வருமானத்திற்குள் குடும்பத்தை நிர்வாகம் செய்வது கடினமாக இருக்கும் குடும்பத்தில் நெருங்கிய உறவினர்களால் தொல்லைகள் உண்டாகும். கணவன் - மனைவியிடையே ஒற்றுமை குறையும். எதிர்பாராத செலவுகள் பொருளாதாரத்தைப் பாதிக்கும். விவாக முயற்சிகளில் தடங்கல் ஏற்பட்டு, அதன் பின்பே வரன் அமையும். வேலை பார்க்கும் ரிஷப ராசி சகோதரிகளுக்கும் சிரமமான காலகட்டம் தான் இது. உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் கிடைப்பது கஷ்டம். தற்காலிக வேலையில் இருப்பவர்களுக்கு வேலை நிரந்தரம் ஆவது தாமதமாகும்.

**ஆரோக்கியம்**

அடிக்கடி காரணம் இல்லாமல் உடல் அசதியும், ஏதாவது ஒரு உபாதை ஏற்படுவதும் அதனால் மருத்துவச் செலவுகளும் உண்டாகும். சிறு காரியங்களுக்குக்கூட அதிகமாக அலைய வேண்டி இருக்கும். அதனாலும் உடல்நலன் குறையக்கூடும். சற்றுக் கவனமாக இருந்தால் ஆரோககியக் குறைவைத் தவிர்க்க முடியும்.

**பொருளாதாரம்**

இப்பொழுதிலிருந்து 16.08.2003 முடிய சற்று சிரமமான காலகட்டம் என்றே கூற வேண்டியுள்ளது. வரவிற்கும் - செலவிற்கும். சரியாகவே இருக்கும் கூடியவரையில் கடன்வாங்குவதைத் தவிர்க்கவும். வசதிகளைக் குறைத்துக் கொண்டாவது சிக்கனமாக இருங்கள். இது உங்களைக் காக்கும், உங்கள் கௌரவத்தைக் காக்கும். உங்களையும் உங்கள் குடும்பத்தையும் காப்பாற்றும். இன்றைய கடன்- நாளைய விஷம் ஆதலால், மனவுறுதியுடன் கடன் வாங்குவதை விலக்கவும். கிரகங்கள் அனுகூலமாக மாறியவுடன் பொருளாதாரமும் தானாகவே சீர்பட்டுவிடும்.

**17.08.2003 முதல்**
**12.04.2004 வரை**

ஜென்மராசியை விட்டு ராகு விலகுவதும், உங்கள் ராசிக்கு சப்தம ஸ்தானத்தைவிட்டு விலகி 6 ஆம் இடமாகிய துலாமிற்குக் கேது மாறுவதும் பல விதங்களிலும் சிரமங்களைக் குறைக்க உதவும். நிதி நிலைமை அபிவிருத்தி அடையும். குடும்பச் சூழ்நிலையிலும் நல்ல மாறுதல் ஏற்படும். முயற்சிகள் அனைத்தும் பலன் அளிக்கும். கடன் சிரமங்கள் குறையும். உடல் உபாதைகள் குறைந்து உடலிலும் உள்ளத்திலும் தன்னம்பிக்கை துளிர் விடும்.

(மிதுன ராசி நாளை)

# வல்வையில் இந்திரவிழா இன்று நடத்த ஏற்பாடு!

(வடமராட்சி)

வல்வை முத்துமாரியம்மன் ஆலய தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு, இந்திரவிழா பதின்மூன்று வருடங்களுக்குப் பின்னர், இன்று நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்திரவிழாவில், இராட்சதப் புகைக் கூண்டுகள் உட்பட பல நூற்றுக் கணக்கான புகைக்கூண்டுகள் வானில் பறக்கவிடப்படவுள்ளன.

நூற்றுக்கணக்கான வாழைகள் கட்டப்பட்டு, நவீன மின்சார அலங்கார வளைவுகளும் அமைக்கப்பட்டுள்ளதுடன், நகரில் ஆங்காங்கே இன்னிசைக் கச்சேரிகள் நடாத்தவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

# சின்னஞ்சிறு செய்திகள்

## சமூகச்சீர்கேடான படம் பார்த்தவர்களுக்கு எச்சரிக்கை

(சுன்னாகம்)

சமூகச் சீர்கேட்டை உண்டாக்கும் விதத்திலான படத்தினைப் பார்த்த இளைஞர்கள் - விடுதலைப் புலிகளால் எச்சரிக்கை செய்யப்பட்ட சம்பவம் கடந்த வாரம் ஏழாலை மயிலங்காட்டுப் பகுதியில் நடைபெற்றது.

இவ்வாறான சம்பவம் இனியும் அப்பகுதியில் நடைபெறாமல் தடுப்பதற்குச் சமூக அக்கறையுள்ளவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (89)

## ஜே.வி.பி.யுடன் இணைந்து சுதந்திரக்கட்சி கூட்டங்கள்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் இணைந்து மாவட்ட மட்டத்தில் கூட்டங்கள் நடத்தித் தமது எதிர்கால அரசியற்கொள்கைகளை விளக்கவுள்ளன.

இரு கட்சிகளும் இணைந்து இந்தத் தீர்மானத்தை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக எதிர்வரும் மே மாதம் நடைபெறவிருக்கும் விசேட கூட்டத்தில் தமது கொள்கைகளைப் பொதுமக்களுக்கு விளக்கவிருக்கிறார்கள்.

## கணிதபாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தரம் 9 மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட மாகாண மட்டப் பரீட்சையின் கணிதபாட விடைத்தாள்களைப் பகுப்பாய்வு செய்வதற்கான செயலமர்வு, நாளை காலை இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில், வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 9, 10 இல் கணிதபாடத்தைக் கற்பித்து வரும் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## நேர்முகப் பரீட்சை கடிதங்கள் சிங்களத்தில்

கல்வியியற் கல்லூரிகளில் இருந்து பயிற்சியை முடித்து வெளியேறிய ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்குரிய கடிதங்கள் பல சிங்கள மொழியில் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதால், அதனை விளங்கிக்கொள்ள அவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். குறிப்பாக இந்து சமயப் பிரிவு ஆசிரியர்களுக்கான கடிதங்கள் சிங்கள மொழியிலேயே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (89)


## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் :லி.விதுஷன்
முகவரி: உயரப்புலம், ஆனைக்கோட்டை.

முதலாவது அகவையில்

பெயர் :அ.சன்ஜீவ்
முகவரி: 288, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



ஐந்தாவது அகவையில்



பெயர் :கா.நிலக்ஷனா
முகவரி: 104, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------
முகவரி :------------------------
பிறந்த ஆண்டு:------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்


# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## தோற்றும் மாணவர்களுக்கான முன் ஆயத்தப் பயிற்சிகள்





# மாணவர் மலர்



1. பத்திரிகை ஒன்றில் வெளிவந்த துணுக்குச் செய்திகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

**துணுக்குச் செய்திகள்**

- இன்று தொடர் கதைகளின் முடிவில் "முற்றும்", "முற்றிற்று" என்று சொற்களை எழுதுகின்றோமே! இதை முதன்முதலில் எழுதி வழிகாட்டியவர் யார் தெரியுமா? இளங்கோவடிகள். சிலப்பதிகாரத்தின் ஒவ்வொரு காண்டத்தின் முடிவிலும், நூலின் முடிவிலும் அவர் இச்சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.
- உலகம் முழுவதும் விரும்பி உண்ணும் "தக்காளி" முதன்முதலில் மெக்சிக்கோவில் தான் பயிரிடப்பட்டது. பின்பு அமெரிக்க நாட்டில் தோமஸ் ஜெபர்சன் என்பவர் தக்காளியைப் பயிரிட்டார்.
- குழந்தைகளுக்கான உலகின் முதல் பத்திரிகை 1751 ஆம் ஆண்டு "ஜோன் நியூ பெரி" என்பவரால் இங்கிலாந்தில் தொடங்கப்பட்டது. பத்திரிகையின் பெயர் "லில்லிபுட்டன்" என்பதாகும்.

தொகுப்பு: உ.விஜிதா,
கொழும்பு.

★ சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

1. பத்திரிகைகளில் அல்லது சஞ்சிகைகளில் வெளிவரும் தொடர்கதைகளின் முடிவில் எழுதப்படும் சொல் எது?
   1. வணக்கம் 2. நன்றி
   3. முற்றும் 4. தலைப்பு
2. "தக்காளி" முதன்முதலில் பயிரிடப்பட்டது.
   1. அமெரிக்கா 2. இங்கிலாந்து
   3. இந்தியா 4. மெக்சிக்கோ

★ சுருக்கமான விடை தருக.

1. அமெரிக்க நாட்டில் தக்காளியை அறிமுகப்படுத்தியவர் யார்?
   ..............................................................................
2. சிலப்பதிகாரத்தை எழுதியவர் யார்?
   ..............................................................................
3. உலகின் முதல் குழந்தைப் பத்திரிகையைத் தொடங்கியவர் யார்?
   ..............................................................................
4. தொடர்கதைகளின் முடிவில் முற்றும், முற்றிற்று ஆகிய சொற்களை எழுதி வழிகாட்டியவர் யார்?
   ..............................................................................
5. உலகின் முதல் குழந்தைப் பத்திரிகை எத்தனையாம் ஆண்டு வெளிவந்தது?
   ..............................................................................
6. மேலே தரப்பட்டுள்ள துணுக்குச் செய்திகளைத் தொகுத்துப் பத்திரிகைக்கு எழுதி அனுப்பியவர் யார்?
   ..............................................................................

★ பின்வரும் தமிழ்ச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக

1. உலகம் .................... 2. அமெரிக்கா ....................
3. பெயர் .................... 4. தக்காளி ....................

★ கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1. நான் தக்காளிப்பழம் வாங்கினேன்.
   ..............................................................................
2. நான் தொடர்கதை வாசிப்பேன்.
   ..............................................................................

★ மேலே தரப்பட்டுள்ள துணுக்குச் செய்திகளில் இடப்பெயர்கள் உள்ளன. அவற்றின் பெயர்களை எழுதுக.

..............................................................................

★ மேலே தரப்பட்டுள்ள துணுக்குச் செய்திகளில் நிறுத்தக்குறிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்களை எழுதுக.

1. .............................. 2. ..............................
3. .............................. 4. ..............................

★ "தக்காளி" பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் மூன்று சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

1. ..............................................................................
2. ..............................................................................
3. ..............................................................................

2. கீழே தரப்பட்டுள்ள உணவுப் பொருட்கள் பழுதடைந்தபின் காணப்படும் அறிகுறிகளை எழுதுக.

| உணவுப்பொருள் | பழுதடைந்தபின் காணப்படும் அறிகுறிகள் |
|---|---|
| போஞ்சி | இடத்துக்குஇடம் கரும்புள்ளிகள் தோன்றுதல் |
| தேங்காய் | |
| மாம்பழம் | |
| வெங்காயம் | |
| கத்திரிக்காய் | |
| பாகற்காய் | |

3. கீழே தரப்பட்டுள்ள பொருட்களை உக்கக்கூடிய பொருட்கள், உக்காத பொருட்கள் என வகைப்படுத்துக.

பொலித்தீன், தேங்காய்மட்டைகள், றப்பர் பந்து, கண்ணாடித்துண்டு, மரத்துண்டு, பலகைகள், அஸ்பஸ்ற்ரஸ் துண்டுகள், சருகுகள்.

| உக்கக்கூடிய பொருட்கள் | உக்காத பொருட்கள் |
|---|---|
| .............................. | .............................. |
| .............................. | .............................. |
| .............................. | .............................. |
| .............................. | .............................. |

4. நேரங்களை இரண்டு முறைகளில் வாசிக்க முடியும். எனவே, கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| ஒரு விதம் | இன்னொரு விதம் |
|---|---|
| மூன்று கழிந்து பத்து நிமிடம் | நான்கிற்கு ஐம்பது நிமிடம் |
| நான்கு கழிந்து நாற்பது நிமிடம் | .............................. |
| .............................. | ஆறுக்குப் பத்து நிமிடம் |
| .............................. | இரண்டிற்குப் பதினைந்து நிமிடம் |
| எட்டு கழிந்து ஐம்பது நிமிடம் | .............................. |
| ஒன்பது கழிந்து முப்பத்தைந்து நிமிடம் | .............................. |
| .............................. | எட்டுக்கு இருபது நிமிடம் |

5. 6, 8, 3, 8 எனும் இலக்கங்களைப் பயன்படுத்தி எழுதக்கூடிய,

1. மிகப்பெரிய எண்ணை இலக்கங்களில் எழுதுக.
   ..............................................................................
2. மிகச் சிறிய எண்ணை இலக்கங்களில் எழுதுக.
   ..............................................................................
3. மிகப்பெரிய எண்ணையும், மிகச்சிறிய எண்ணையும் எழுத்துக்களில் எழுதுக.
   ..............................................................................

6. மூன்று ஈர்க்குத் துண்டங்களினால் காட்டக்கூடிய உரோமன் எண்குறிகள் நான்கை எழுதுக.

1. .............................. 2. ..............................
3. .............................. 4. ..............................

7. பின்வரும் பிரசினங்களைத் தீர்க்குக.

1. தோட்டம் ஒன்றில் 143 தென்னைமரங்களும், 53 பலா மரங்களும் உள்ளன. தோட்டத்தில் எல்லாமாக எத்தனை மரங்கள் உள்ளன?
   (.............)
2. பண்ணை ஒன்றில் 118 பசுக்களும், 80 ஆடுகளும் இருக்கின்றன. பண்ணையில் எல்லாமாக எத்தனை கால்நடைகள் இருக்கின்றன?
   (.............)
3. பேருந்து ஒன்றில் 51 பயணிகள் இருக்கின்றனர். வேறொரு பேருந்தில் 36 பயணிகள் இருக்கின்றனர். மூன்றாவது பேருந்தில் 48 பயணிகள் இருக்கின்றனர். மூன்று பேருந்துகளிலும் எத்தனை பயணிகள் இருக்கின்றனர்?
   (.............)
4. மாமரம் ஒன்றில் 36 மாங்காய்களும், 38 மாம்பழங்களும் உள்ளன. பிறிதொரு மாமரத்தில் 40 மாங்காய்களும், 37 மாம்பழங்களும் உள்ளன. இரண்டு மாமரங்களிலும் உள்ள மாங்காய்கள் எத்தனை? மாம்பழங்கள் எத்தனை?
   (.............) (.............)

8. "பாடசாலை விடுமுறையில்" ............ என்ற தலைப்பில் ஆறுவாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல்வேண்டும்.

1. ..............................................................................
2. ..............................................................................
3. ..............................................................................
4. ..............................................................................
5. ..............................................................................
6. ..............................................................................

வி.என்.எஸ்.உதயசந்திரன்
B.A. (Cey) B.Ed(Hons) Dip.in.Ed.



# கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை

## பொருளியல்

## தேசிய வருமானம்

1. எந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு நாட்டினது மொத்த உள்நாட்டுச் செலவீடு அதனது மொத்தத் தேசிய உற்பத்திப் பெறுமதியிலும் பார்க்க உயர்வாக இருக்கலாம்?

பொருட்கள் காரணியல்லா சேவைகள் என்பவற்றினது இறக்குமதிப் பெறுமதி அவற்றின் ஏற்றுமதிப் பெறுமதியிலும் கூடுதலாக இருப்பின் - அதாவது, பொருட்கள் காரணி அல்லாச் சேவைகளின் தேறிய இறக்குமதி எதிர்க்கணிய மாயின், மொத்த உள்நாட்டுச் செலவீடானது மொத்தத் தேசிய உற்பத்தியிலும் பார்க்க உயர்வாக இருக்கும்.

உதாரணமாக -

| | |
|---|---|
| மொத்த உள்நாட்டுச்செலவு நடைமுறை விலை | 2000 M |
| பொருட்கள் காரணி அல்லா சேவை ஏற்றுமதி | 1000 M |
| பொருட்கள் காரணி அல்லா சேவை இறக்குமதி | 1500 M |
| பொருட்கள் காரணி அல்லா சேவையின் தேறிய இறக்குமதி | (-500M) |
| மொத்த உள்நாட்டு உற்ப்த்தி மீதான செலவு (நடப்பு விலை) | 1500 M |

2. ஒருநாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது மொத்த உள்நாட்டுச் செலவிற்குச் சமனாக அமையுமா? உமது விடையை விளக்குக?

இல்லை.

மொத்த உள்நாட்டு உற்பத்தியானது மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவிற்கே சமனாகும். அதாவது, மொத்த உள்நாட்டு செலவோடு பொருட்கள் காரணி அல்லாச் சேவைகளின் ஏற்றுமதியைக் கூட்டி, பொருட்கள் காரணி அல்லாச் சேவைகளின் இறக்குமதியைக் கழிப்ப தன் மூலம் உற்பத்தி மீதான செலவு பெற்றுக் கொள்ள முடியும். இந்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவே மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் சமனாக அமையும்.

3. ஓர் எளிமையான பொருளாதாரத்தில் X,Y எனப்படும் இரண்டு கைத்தொழில்கள் இருக்கின்றன எனக் கருதுக. குறிப்பிட்ட ஓர் ஆண்டில் X இனது உற்பத்திப் பெறுமானம் 20,000 மில்லியன் ஆகும். Y யினது உற்பத்திப் பெறுமானம் 15,000 மில்லியன் ரூபாவாக இருந்தது. இவற்றை உற்பத்தி செய்வதற்கு Y யிடம் இருந்து 6000 மில்லியன் ரூபா பெறுமதிகொண்ட பண்டங்களை X கொள்வனவு செய்தது. Y ஆனது 3000 மில்லியன் பெறுமதிகொண்ட பண்டங்களை X இடம் இருந்து கொள்வனவு செய்தது. இரு கைத்தொழில்கள் சம்பந்தமான பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்படுகின்றன.

(எல்லாத் தொகையும் மில்லியன் ரூபாவில் உள்ளன)

| | |
|---|---|
| பண்டங்களினதும் காரணி அல்லாச் சேவைகளினதும் இறக்குமதி | 6,500 |
| மூலதனச் சொத்துக்களின் தேய்மானம் | 500 |
| நுகர்வோருக்கான மொத்த விற்பனை | 18,000 |
| பண்டங்கள் காரணிச் சேவையின் ஏற்றுமதி | 8,000 |
| மொத்த இலாபம் | 7,000 |
| நிலையான மூலதனச் சொத்து முதலீடு | 6,000 |
| இருப்பு அதிகரித்தமை | 500 |
| உள்நாட்டுச் சேமிப்பு | 3,000 |
| வாடகை, வட்டி ஆகியவற்றின் கொடுப்பனவு | 10,000 |
| கொடுத்த கூலிகள் | 8,500 |
| வெளிநாட்டு உரிமையாளருக்குப் பங்கு இலாபமாகக் கொடுக்கப்பட்டது மொத்த இலாபத்தில் அடங்கும் | 500 |

பொருத்தமான தரவைப் பயன்படுத்தி உற்பத்தி வருமானம், செலவு அணுகுமுறையைக் கையாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்திப் பெறுமானத்தைக் கணிக்க?

சேர்க்கப்பட்ட பெறுமதி = உற்பத்திப் பெறுமானம் - (மூலப்பொருள் + இடைநிலைப்பொருள் கொள்வனவு)

அ. உற்பத்தி முறையான கணிப்பீடு

| | |
|---|---|
| x இன் சேர்க்கப்பட்ட பெறுமதி (20000-6000) = | 14000 |
| y இன் சேர்க்கப்பட்ட பெறுமதி (15000-3000) = | 12000 |
| மொத்த உள்நாட்டு உற்பத்திப்பெறுமதி | 26000 |

ஆ. வருமான முறைக் கணிப்பீடு

| | |
|---|---|
| 1. வாடகை வட்டி வருமானம் | 10,000 |
| கொடுத்த கூலி | 8,500 |
| மூலதனத் தேய்வு | 500 |
| மொத்த இலாபம் | 7,000 |
| மொத்த உள்நாட்டு வருமானப் பெறுமதி | 26,000 |

இ. செலவு முறைக் கணிப்பீடு

மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு = நுகர்வு + முதலீடு + ஏற்றுமதி - இறக்குமதி

| | | |
|---|---|---|
| 1. நுகர்வு (மொத்த விற்பனை) | | 18,000 |
| 2. நிலையான மூலதனச் சொத்தின் முதலீடு | | 6,000 |
| 3. இருப்புக்கள் அதிகரிப்பு | | 500 |
| மொத்த உள்நாட்டுச் செலவு | | 24,500 |
| 4. ஏற்றுமதி | 8,000 | |
| இறக்குமதி | (6,500) | 1,500 |
| உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு | | 26,000 |

ஈ. மொத்தத் தேசிய உற்பத்தியையும் தேறிய தேசிய உற்பத்தியையும் மதிப்பிடுக.

மொத்தத் தேசிய உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி - தேறிய வெளிநாட்டு காரணி வருமானம் (வெளிச் சென்ற பங்குலாபம்)
= 26000 - 500

மொத்தத் தேசிய உற்பத்தி = 25500

❋ தேறிய தேசிய உற்பத்தி = மொத்தத் தேசிய உற்பத்தி - பெறுமானத் தேய்வு
= 25500 - 500

தேறிய தேசிய உற்பத்தி = 25000

4. தேசிய வருமான உற்பத்திக் கணிப்பீட்டிலுள்ள பல்வேறு பிரச்சினைகளை நுணுக்கமாக இனங்காண்க?

1. உள்நாட்டுத் தொழிலாளர்களுக்குச் செலுத்தப்படாத கூலி
2. வீட்டுத்துறைக்கு வெளியே நிகழ்ந்த பணரீதியற்ற பௌதீகக் கொடுக்கல் வாங்கல்
3. வருமானப் பங்கீடு சமமின்மை
4. தேவையிலும், சூழலிலும் வேறுபாடு நிலவுதல்
5. சர்வதேச ஒப்பீட்டிற்கு நாணயமாற்று வீதத்தின் பயன்பாடு
6. செல்வமும் பெறுமானத் தேய்வும்
7. தகுதிப் பண்டங்கள்
8. ஓய்வு நேரம்
9. தனியார்துறையின் வினைத்திறன் இன்மை
10. உற்பத்தித் திறனின்மை.

5. மூடப்பட்ட பொருளாதாரத்தில் வருமானம் நுகர்வு தொடர்பாகத் தகவல் தரப்பட்டுள்ளன.

| Y | C |
|---|---|
| 1000 M | 900 M |
| 1500 M | 1300 M |

பின்வருவனவற்றை மதிப்பிடுக.

அ. நுகர்வுத் தொழிற்பாட்டை வரையறுக்குக.

$C = a + byd$

செலவிடக்கூடிய வருமானம் வருமானத்துக்குச் சமனாக விருப்பதால்,

$yd = y$

$\therefore C = a + by$

$$MPC = \frac{\Delta c}{\Delta y} = \frac{400}{500} = 0.8$$

$C = a + 0.8y$

$900 = a + 0.8 \times 1000$

$900 = a + 800$

$a = 100$

$\therefore C = 100 + 0.8y$

ஆ. தனியார் முதலீடு 100 m எனவும், அரச செலவு 150 m எனவும் இருக்கும்போது சமநிலைத் தேசிய மட்டம் யாது?

$C = 100 + 0.8y \quad I = 100\,M \quad G = 150\,M$

$Y = C + I + G$

$Y = 100 + 0.8\,y + 100 + 150$

$Y = 350 + 0.8\,y$

$0.2\,Y = 350$

$Y = 1750\,M$

6. பின்வரும் பொருளாதாரம், திறந்த பொருளாதாரத்தை உடைய பொருளாதாரமாக உள்ள பொருளாதாரமாகும்.

$Td = 0.2y \quad M = 50 + 0.1\,y$

$I = 10 + 0.1\,y \quad G = 100\,M \quad X = 30\,M$

| செலவிடக்கூடிய வருமானம் yd | நுகர்வு C |
|---|---|
| 100 | 130 |
| 500 | 450 |

அ) எல்லை சேமிப்பு, நுகர்வு நாட்டத்தைக் கணிப்பிடுக.

$$MPC = \frac{\Delta C}{\Delta Y} = \frac{320}{400} = 0.8$$

$MPC + MPS = 1$

$0.8 + MPS = 1$

$MPS = 1 - 0.8$

$MPS = 0.2$

எல்லை நுகர்வு = 0.8

எல்லை சேமிப்பு = 0.2

$Td = 0.2\,y \quad M = 50 + 0.1\,y \quad X = 30\,M$

$I = 10 + 0.1\,y \quad G = 100\,M \quad C = 50 + 0.8\,y$

$C = a + byd$

$C = a + byd$

$130 = a + 0.8 \times 100$

$130 - 80 = a$

$a = 50$

$\therefore C = 50 + 0.8\,y$

ஆ) சமநிலைத்தேசிய மட்டம் என்ன?

$Y = C + I + G + (x - m)$

$Y = 50 + 0.8y + 10 + 0.1y + 100 + 30 - (50 + 0.1y)$

$Y = 388.89$

$Y \simeq 389$

இ) நுகர்வு மட்டம் யாது?

$C = 50 + 0.8\,yd$

$C = 50 + 0.8\,(389 - 0.2 \times 389)$

$C = 298.96$

$C \simeq 299$

ஈ) சேமிப்பு பூச்சியமாக இருக்கும்போது வருமான மட்டம் என்ன?

$S = -50 + 0.2\,yd$

$S = -50 + 0.2\,(y - 0.2y)$

$O = -50 + 0.16\,y$

$$Y = \frac{5000}{16}$$

$Y = 312.5M$

உ) இப்பொருளாதாரத்தில் சர்வதேச வர்த்தகம் பற்றி யாது கூறுவீர்?

இப்பொருளாதாரத்தில் ஏற்றுமதியிலும் பார்க்க இறக்குமதி கூடுதலாக இருப்பதால், சென்மதி நிலுவையில் குறை நிலை தோன்றும்.

M இறக்குமதி $= 50 + 0.1y$
$= 50 + 38.9$
$= 88.9$

ஏற்றுமதி $= 30$

**சென்றவாரத் தொடர்ச்சி...**

வினா 05

அமையச் செலவு என்பது.

1. இழக்கப்படும் தொகை ÷ பெறப்படும் தொகை.
2. பெறப்படும் தொகை ÷ இழக்கப்படும் தொகை.
3. பெறப்படும் தொகை மாற்றம் X இழக்கப்படும் தொகை மாற்றம்.
4. இழக்கப்படும் தொகை மாற்றம் + பெறப்படும் தொகை

விடை (1)

வினா 06

இலவசப் பண்டம், பொருளாதாரப்பண்டம் என்பதை வேறுபடுத்தும் காரணிகள் எவை.

1. அருமை
2. அமையச்செலவு
3. சாதனச் செலவு, தனியுரிமை
4. பணச்செலவு.

விடை (1), (2), (3)



சி.சிவசெந்தூரன்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## தளிர்களின் சிதைவு !

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மீள்குடியேற்றத்திற்கும், சுமுக வாழ்வுக்கும் பெருந்தடைக்கல்லாக இருந்துவரும் - படையினர் விதைத்துச் சென்ற மிதிவெடிகளுக்கு மற்றொரு மாணவன் ஒருவனும் பலியாகியிருக்கிறான்.

மீசாலையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - மிதிவெடியை எடுத்து, அது வெடித்தால் ஏற்படும் பாதிப்புக்கள் தெரியாதவனாக - அதனைச் சுவரில் எறிந்து விளையாடியபோது, அம்மிதிவெடி திடீரென வெடித்ததில் படுகாயமடைந்த பதினான்கு வயதான சிறுவன் - சிகிச்சைகள் பலனளிக்காத நிலையில் மரணமடைந்திருக்கிறான்.

மிதிவெடிகளின் ஆபத்தையும் - அது வாழ்வையே பறித்துக்கொள்ளும் கொடூரத்தையும் உணராது நடந்த, தேவையற்ற உயிரிழப்புக்களின் தொடர்ச்சியாக இந்த மாணவனின் மரணமும் இடம்பிடித்திருக்கிறது.

மக்கள் வாழ்விடங்கள் எங்கும் - வீடுகள், பாடசாலைகள், ஆலயங்கள், வீதிகள், வயல்வெளிகள் என எங்கெங்கும் பரவலாக விதைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகளின் ஆபத்துப் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தபோதும் - இந்த அநாவசிய உயிரிழப்புக்களைத் தடுக்க முடியாதிருப்பது துரதிர்ஷ்டமானதாக நீடித்தே செல்கின்றது.

சர்வதேச விதிமுறைகளுக்கு முரணாக - பொதுமக்கள் புழங்கும் பகுதிகளிலும் படையினரால் புதைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகளின் அச்சுறுத்தல் - கடந்த காலங்களைவிட , அண்மைக்காலத்தில் அதிகரித்து வருகின்றது.

பொதுமக்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளத் திரும்புவதிலும், சுமுகவாழ்வினை ஆரம்பிப்பதிலும் ஆர்வம் கொண்டுள்ள வேளையில் - இந்த ஆபத்தும் மக்களுக்கு மிக அருகிலேயே வந்துவிடுகின்றது.

மக்களாக, மிதிவெடிகளில் அகப்பட்டு உயிரிழப்பதும், படுகாயமடைவதும் ஒருபுறமிருக்க - கண்டெடுக்கும் மிதிவெடிகளைக் கையாள முனைந்து, முட்டாள்தனமாக தமது வாழ்வையே சிதைத்துவிட முயற்சிப்பதானது - தாமாகவே ஆபத்தை விலைக்கு வாங்கிக் கொள்வதாகின்றது.

சுயமாகவே அழிவைக் கட்டியணைத்துக்கொள்ளும் இந்த நடவடிக்கைகளில் - விபரமறியாத சிறார்களோடு, மிதிவெடிகளின் ஆபத்துப்பற்றி அறிந்த பெரியவர்கள்கூட ஈடுபடுவதை என்னவென்று சொல்வது?

மிதிவெடிகளைக் கண்டறிந்தால் அல்லது அது பற்றிய சந்தேகம் ஏற்பட்டால் - உடனடியாக அருகிலுள்ள மிதிவெடி அகற்றும் பிரிவுகளுக்கு அறிவித்து- முறையான பயிற்சி பெற்றவர்கள் மூலம் அதனை, அவதானமாக அகற்றுவதை விடுத்து - அசட்டுத் துணிச்சலில் தாமாகக் காரியத்தில் இறங்குவதை மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

பெரியவர்கள் - தாமும் சுதாகரிப்புடன் செயற்படுவதோடு - மிதிவெடிகள் பற்றிய விழிப்புணர்வை, ஆபத்தை சிறார்களுக்கு - அவர்கள் அவற்றைத் தெளிவாக உணரும் வகையில் எடுத்துச் சொல்ல வேண்டும்.

பெரியவர்களின் கவனயீனமும், அசட்டைத்தனமும், அலட்சியமும் - சிறார்களை மிதிவெடிப் பயங்கரத்துக்குள் வலிந்து இழுத்துச் செல்லும் ஊக்குவிப்புக்களாகிவிடும் என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

தமது வயதுக்குரிய குறும்புத்தனங்களோடு - உயிராபத்தைப் பற்றிக் கவலைப்படாதவர்களாகச் சிறார்கள் நடக்க முனையும்போது - அதனைக் கட்டுப்படுத்தும், வழிநடத்தும் , அறிவூட்டும் பொறுப்பினைப் பெற்றோர்களோ, ஆசிரியர்களோ மறுத்துவிட முடியாது.

மனிதநேய அமைப்புக்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் - மிதிவெடி அபாயம் பற்றி எடுத்துரைக்கும் விழிப்புணர்வும், விளக்கமும் சிறார்களைச் சென்றடையத்தக்கதாக இன்னமும் வலுவூட்டப்படவேண்டும்.

சிறார்களின் அறிவுக்கு எட்டத்தக்க வகையில் - மிகவும் எளிமையான வழிகளில், அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில், ஆபத்தை உணர்ந்து அதிலிருந்து விலகத்தக்கதாக - தமது சகபாடிகளையும் வழிச்செலுத்தக் கூடியதாக - விழிப்புணர்வுப் பிரசாரம் சிறார்களைச் சென்றடைய வேண்டும்.

இந்த விடயத்தில் அனைத்துத் தரப்பினரும் கரிசனையோடும், கவனத்தோடும் செயற்பட்டால் மட்டுமே - இளந்தளிர்கள், மிதிவெடிகளுக்குப் பலியாவதைத் தடுக்க முடியும், தவிர்த்துக்கொள்ள முடியும்.

# யாழ். நீதிமன்றிலுள்ள வழக்குகளை துரிதமாக விசாரிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்திலும், யாழ்.மேலதிக நீதிவான் நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளை விரைவாக விசாரித்து முடிப்பதற்குப் புதிய ஒழுங்குமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

நீதிமன்ற அழைப்புக் கட்டளைகள், பிடியாணை என்பனவற்றை விரைவாகப் பொலிஸார் செயற்படுத்துவதற்கு வசதியாகக் குடாநாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு மேலதிக வாகனங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

அத்துடன், யாழ்ப்பாணம் நீதிமன்றம் மற்றும் மேலதிக நீதிவான் நீதிமன்றம் ஆகியவற்றில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் - பொலிஸ் பிரிவுரீதியாக விசாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் திங்கட்கிழமை மற்றும் புதன்கிழமைகளிலும், அச்சுவேலிப் பொலிஸ் நிலையப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் புதன்கிழமைகளிலும்,

யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் யாழ். பொலிஸ் நிலையப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் செவ்வாய்க்கிழமைகளிலும், கோப்பாய் பொலிஸ் நிலையப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் வியாழக்கிழமைகளிலும் விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மக்கள் எதிர்ப்பினால் தாண்டியடியிலிருந்து அதிரடிப்படையினர் வெளியேறுகின்றனர்!

(யாழ்ப்பாணம்)

அம்பாறை தாண்டியடிப் பாடசாலையில் உள்ள விசேட அதிரடிப்படை முகாமை வேறிடத்திற்கு மாற்றுவதற்கு அதிரடிப்படை அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ், பாடசாலைகள் மற்றும் பொதுக் கட்டடங்களில் தங்கியிருக்கும் படையினர் வெளியேறவேண்டுமெனக் கூறப்பட்டிருந்தது. எனினும், தாண்டியடி பாடசாலையில் தங்கியிருந்த விசேட அதிரடிப் படையினர் அங்கிருந்து வெளியேற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இது குறித்து அப்பகுதி மக்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருடன் இணைந்து தாண்டியடிப் பாடசாலையிலிருந்து இராணுவத்தினரை வெளியேறுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு ஊடாக, காரைதீவு விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரிக்கு மகஜர் அனுப்பியுள்ளனர்.

இதன் பிரதி, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் அனுப்பப்பட்டது. இதையடுத்து, கடந்த ஞாயிற்றுக்கிழமை திருக்கோவில் விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி தலைமையிலான அதிகாரிகள் - பொது அமைப்புப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலை நடத்தினர்.

இதன்போதே, தாண்டியடி பாடசாலைக் கட்டடத்தை விட்டு அதிரடிப்படையினர் முற்றாக விலக்கப்படுவர் என்றும், இதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என்றும் அதிரடிப்படை அதிகாரிகள் உறுதியளித்தனர்.

## இந்திய நிறுவனத்திடமிருந்து படையினருக்கு கவச உடைகள்

படையினருக்காக 35 ஆயிரம் ஹெல்மட்டுக்களையும், 32 ஆயிரம் குண்டு துளைக்காத அங்கிகளையும் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இது சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அமைச்சரவைக்கூட்டத்திலும் அறிக்கை சமர்ப்பித்தார். இந்த இராணுவச் சாதனங்கள் இந்தியாவில் உள்ள 'டாட்டா அட்வான்ஸ் மற்றீறியல்' நிறுவனத்திடமிருந்து கடன் அடிப்படையில் பெறப்பட்டுள்ளன.

இதேவேளை - இந்தப் பொருட்கள் பெறுவதற்குரிய கேள்விப்பத்திர நடவடிக்கையில் பல தில்லுமுல்லுகள் இடம்பெற்றதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# நவீன வசதிகள் சூழும் உலகில் ஒரு கிராமத்தின் கண்ணீர்க் கதை!



வாழைச்சேனையிலிருந்து சுமார் 35 கிலோமீற்றர்களுக்கு அப்பால் வாகரை பிரதேச செயலகப் பிரிவில் - மதுரங்கேணிக் குளக் கிராமம் உள்ளது. 152 குடும்பங்கள் வாழுகின்ற மேற்படி கிராமத்தில், மக்களுக்குரிய அடிப்படைவசதிகள் எதுவுமின்றி வாழவேண்டிய ஒரு துர்ப்பாக்கியநிலையில் இக் கிராம மக்கள் உள்ளனர்.

இக்கிராம மக்கள் பொருட்களைப் பெறவேண்டுமானால், 35 கிலோமீற்றர் நடந்து சென்றே - வாழைச்சேனையில் பொருட்கள் பெறவேண்டும். போக்குவரத்துச் செய்வதற்குரிய வாகன வசதிகள் எதுவுமில்லை. இங்கு வாழுகின்ற 152 குடும்பங்களில், இரண்டு பேரிடம் மாத்திரமே துவிச்சக்கரவண்டிகள் உள்ளன.

அநேகமாக இக்கிராமத்திலுள்ள மக்கள், ஏதாவது அவர்களுக்குத் தேவையான பொருட்கள் பெறவேண்டுமாயின் போக்குவரத்திற்குரிய சம்பளம் கொடுத்து துவிச்சக்கரவண்டி உள்ளவர்களிடம் அனுப்புவார்கள். இந்தளவிற்கு வாழ்க்கையின் அடிமட்டத்திலுள்ள மக்களுக்குக் கடந்த 2000 ஆம் ஆண்டில் வாகரை போக்குவரத்துச்சபை உபசாலையினால் மேற்படி கிராமத்திற்கு பஸ் சேவை நடத்தப்பட்டது. ஆனால், நடத்தப்பட்ட பஸ் சேவை ஒரு மாதத்தின் பின்பு இடைநிறுத்தப்பட்டது. பின்பு அதிகாரிகளிடம் அறிவித்தும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இங்குள்ள வாழ்விடங்களைப் பார்க்கும்போது , இவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் தெளிவாகப் புலப்படுகின்றன. இது தொடர்பாக இக்கிராமத்தின் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர் க.இராசமாணிக்கம் தெரிவித்தபோது - இங்கு அனைவருமே வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்கள்தான். 152 குடும்பங்களில் 128 குடும்பத்திற்குச் சமுர்த்தி நிவாரணமுத்திரை வழங்கப்படுகின்றது. இம்மக்கள் யுத்த சூழ்நிலையால் நன்கு பாதிக்கப்பட்டவர்கள். இராணுவத்தினரால் 15 பேர் சுடப்பட்டனர். இராணுவத்தின் திட்டமிட்ட கொலையினால் 13 விதவைகளும், தாய், தந்தை இல்லாமல் மூன்று சிறுவர்கள் அனாதைகளாகவும் உள்ளனர். இராணுவப் பொறிவெடியினால் மூவர் அங்கவீனமுற்றுள்ளனர் என்றும், மேற்படி கிராமம் கவனிப்பாரற்ற நிலையில் உள்ளது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, இக்கிராமத்திலுள்ள அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் அதிபர் எஸ்.சுகுமார் கல்விநிலை குறித்துத் தெரிவித்தபோது - மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கபபடும்போது மயக்கமடைவதாகவும், இது தொடர்பாக ஆராய்ந்த வேளை, மாணவர்கள் காலை உணவின்றி வீட்டிலுள்ள வறுமைநிலை காரணமாகவே பெரும்பாலானோர் வருவதாகவும் தெரிவித்தார். பத்து வருடகாலமாக நாற்காலி இல்லாமல் மாணவர்கள் தரையிலே இருந்து கற்றுவருகின்றனர். சுமார் 136 மாணவர்கள் கல்வி கற்கும் இப்பாடசாலையில், 9 ஆம் தரம்வரை வகுப்புக்கள் உள்ளன. ஐந்து நிரந்தர ஆசிரியர்கள் உள்ளனர். 11 ஆசிரியர்கள் இப்பாடசாலைக்குத் தேவையெனவும், கட்டடவசதி மிகமிகக் குறைவாகவும், ஐந்து வகுப்புக்கள் நடாத்த கட்டடவசதி தேவையாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

அதுமட்டுமல்லாது வாகன வசதிகள் இல்லாத காரணத்தினால் ஆசிரியர்கள் தங்கி நின்றே வகுப்பு நடாத்துகின்றனர். இருந்தும், ஆசிரியர்களுக்கான தங்குமிட வசதி இல்லாமல் மாணவர்கள் கல்விகற்கும் வகுப்பறைகளில் தங்குவதைக் காணமுடிகின்றது.

இதேவேளை, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணம், பாடசாலைத் தளபாட வசதிகள் இப்பாடசாலையில் பெரும் குறையாகவுள்ளன.

அத்துடன், கட்டட வசதி இல்லாமையினால் மர நிழல்களில் வகுப்புக்கள் நடாத்தவேண்டிய நிலையும் இருக்கின்றது. இவற்றுடன், இங்கே மாணவர்கள் குண்டெறிதல், விளையாட்டு நிகழ்ச்சிக்கு கருங்கல்லைக் கொண்டு குண்டெறிவதையும், உயரம் பாய்தல் நிகழ்வுக்கு - கம்புகளைப் பயன்படுத்தி



உயரம் பாய்வதையும் காண முடிந்தது. இருந்தும், இம்மாணவர்கள் வாகரைப் பிரதேச மட்டத்தில் விளையாட்டு நிகழ்வில் விசேட பெறுபேறுகளைப் பெற்று வருகிறார்கள்.

இது இவ்வாறிருக்க, மாணவர்களுக்கான கட்டாய போஷாக்கு வழங்கும் திட்டம் இப்பாடசாலையில் தேவையெனவும் தெரிவித்த அதிபர் - ஆசிரியர்களுக்கான கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவும் இங்கு வழங்கப்படுவதில்லையெனவும் தெரிவித்தார்.

# வழுக்கையாற்று அபிவிருத்தித் திட்டத்துக்கு அரசாங்கம் வழங்கும் நிதியுதவி போதாது!

**சி.பொ.வ.மா.க.முதலியார் மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவராக இருந்து பல சேவைகளை ஆற்றிவருவதுடன், பொதுப்பணிகளி லும் ஈடுபட்டுவருகின்றார். தன்னுடைய நீண்டகால அனுபவத்தின் வாயிலாக வழுக்கையாறு தொடர்பாகப் பல புனரமைப்புக்களையும், வேலைத்திட்டங் களையும் உருவாக்கியவர்.**

**அதிலொன்றுதான் அண்மையில் புதிதாக உருவாக்கப்பட்ட முதலியார் குளமாகும். முதலியார், நமது ஈழநாட்டுக்கு வழங்கிய நேர்காணல் இது.**



**கேள்வி:-** யாழ்ப்பாணத்திலுள்ள ஒரேயொரு நன்னீர் ஆறு என்ற வகையில் வழுக்கையாறு முக்கியத் துவம் பெறுகின்றது. அதனுடைய ஆரம்பம், விஸ்தீரணம், பயன்பாடு கள் பற்றிக் கூறமுடியுமா?

**பதில்:-** யாழ் மாவட்டத்தில் வழுக்கையாறு, விவசாயச் செய்கை யில் முக்கியமான இடத்தை வகித்து வருகின்றது. பத்து கிலோமீற்றர் நீளமுடைய இந்த ஆறு, மாரிகாலத் தில் தெல்லிப்பளை - அம்பனைக் குளம், அளவெட்டி - பினாக்கைக்கு ளம் ஆகியவற்றில் ஆரம்பித்துக் கந்தரோடைக்குளம், கட்டுடையி லுள்ள ஐந்து கண் மதகு வழியாக முதலியார் குளத்தை வந்தடைகின் றது. அங்கிருந்து அராலிக் கடலுக் குச் சென்று, அங்கு கடலுடன் சங்க மமாகின்றது. இப்பகுதியிலுள்ள பல சிறிய குளங்களிலுள்ள மேலதிக நீரும் வாய்க்கால்கள் வழியாக மாரி காலத்தில் இந்த ஆற்றுடன் கலக் கின்றது.

பண்டைக்காலத்தில்- தமிழ் மன் னர்கள் அரசோச்சியபோது - அராலி கடற்கரைத் துறையிலிருந்து இவ் வழுக்கையாற்றில் வள்ளங்கள் மூல மாக வந்த மன்னர்களும், மக்களும்- கட்டுடை ஐயனார் கோவில், கந்த ரோடை கண்ணகி அம்மன்கோவில், சுன்னாகம் ஐயனார் கோவில், அள வெட்டிக் கும்பழாவளைப் பிள்ளை யார் கோவில், மாவிட்டபுரம் கந்தசு வாமி கோவில் ஆகியவற்றைத் தரி சித்துச் சென்றதாக வரலாறுகள் மூலம் அறியமுடிகின்றது. இந்த ஆற்றின் இரு கரைகளிலும் உள்ள காணிகளில், விவசாயிகள் கால போக நெற்செய்கையைப் பல்லாண்டு காலமாக மேற்கொண்டுவருகிறார் கள். இங்கு சுமார் ஆயிரம் ஹெக் ரயர் ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணி களில் நெற்செய்கை மேற்கொள் ளப்பட்டுவருகின்றது. மேற்படி குளங் களுக்கு அண்மையிலுள்ள காணிக ளில் மாரிகாலத்தில் மட்டுமன்றி, கோடைகாலத்திலும் மரக்கறிப் பயிர்ச்செய்கையை விவசாயிகள் மேற்கொண்டுவருகிறார்கள்.

வானம் பார்த்த பூமி என்று கரு தப்படும் இப்பிராந்தியத்தில் - இந்த வழுக்கை ஆற்றுப்படுக்கை, இப் பகுதி விவசாயிகளுக்கு ஒரு வரப் பிரசாதமாக விளங்குகின்றது. மரக்க றிப் பயிர்கள் பயிரிடப்படுவதுடன், பெருமளவு விவசாயிகள் பொன்னாங் காணிச் செய்கையில் ஈடுபட்டு, இன்று வருமானம் பெற்றுவருவதை அவதா னிக்கக்கூடியதாக உள்ளது.

**கேள்வி:-** தங்களின் நீண்டகால முயற்சியினால் அண்மையில் நவாலி, சங்கரத்தைப் பகுதியில் புதிதாக முத லியார்குளம் உருவாக்கப்பட்டுள்ளது. இப்புதியகுளம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் பற்றிக் கூறமுடியுமா?

**பதில்:-** வழுக்கை ஆறானது அளவெட்டியில் உற்பத்தியாகி - அராலிக் கடலில் போய்ச் சங்கமமா கின்றது. வீணாக, அராலிக் கடலில் போய்விழும் மிதமிஞ்சிய நீரைத் தேக்கிவைத்து - சங்கரத்தை, நவா லிப் பகுதியிலுள்ள விவசாயக் காணி களைச் செழிப்புடையதாக மாற்ற வேண்டும் என்ற திட்டத்திற்கிணங்க, நீர்ப்பாசனத் திட்டத்தினால் உரு வாக்கப்பட்டதே இப்புதிய முதலி யார் குளமாகும். மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனம் நீண்டகால மாக இக்குளத்தை இங்கு நிர்மா ணிக்கவேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்து வந்தது. நீர்ப்பாசனத் திணைக்களம் 2000 ஆம் ஆண்டு அபிவிருத்தித் திட்டத்தில் இக்குள நிர்மாணப் பணிகளுக்கென 15 லட் சம் ரூபாவை ஒதுக்கித் தந்தது. மானிப்பாய் மேற்கு விவசாய சம் மேளனம் அதனை ஒப்பந்த அடிப் படையில் பொறுப்பேற்று நிர்மாணப் பணிகளைச் செய்துமுடித்தது.




மாங்காய் வடிவில் அமைக்கப் பட்ட இக்குளம், ஒரு கிலோமீற்றர் சுற்றளவைக் கொண்டது. அணைக் கட்டு விட்டம் அரை கிலோமீற்றர் சுற்றளவைக் கொண்டதாகவுள்ளது. இக்குளத்தில் வழுக்கை ஆற்றிலி ருந்து வரும் நீரைத்தேக்கி வைப் பதன்மூலம் இப்பகுதிகளிலுள்ள விவசாயக் காணிகளில் காலபோக நெற்செய்கை செழிப்படைய வாய்பபு ஏற்பட்டுள்ளது. சுற்றாடல் பகுதிக ளில் உள்ள காணிகளில் ஈரலிப்பு ஏற்படுவதுடன், கிணறுகளிலும் நல்ல தண்ணீர் ஊற்று அதிகரித் துவரும் என்று எதிர்பார்க்கப்படுகின் றது. அத்துடன், கோடைகாலத்தில் உப உணவுப் பயிர்ச்செய்கையை யும், மரக்கறிப் பயிர்ச்செய்கையை யும் விவசாயிகள் மேற்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. வரட்சிக் காலத்தில் ஆடு, மாடுகள் இக்கு ளத்தில் வந்து தண்ணீர் குடிக்கவும் வசதி ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் இப்பகுதி மக்கள் கால்நடை வளர்ப் பிலும் ஈடுபடமுடியும். எமது பிராந் தியத்திலுள்ள விவசாயிகள் ஒரு வருடம் மழை இல்லாதுவிட்டால் தமது வயற்காணிகளில் செலவிட்ட பணத்தை எடுக்கமுடியாத நிலையில் நஷ்டமடைவதை அடிக்கடி காணக் கூடியதாக உள்ளது. மேலைநாடுக ளில் விவசாயிகளுக்கு மாதந்தோ றும் ஊக்குவிப்புப்பணம் வழங்கி வருகின்றனர். இதன் காரணமாக அங்கு உற்பத்தி அதிகரிக்கின்றது. இதைப்போல எமது பிரதேசத்திலும் வாழும் விவசாயிகளுக்கு ஊக்கு விப்புக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

**கேள்வி:-** வழுக்கை ஆற்றுடன் இணைக்கப்பட்டுள்ள குளங்களின் புனரமைப்புப் பற்றிக் கூறமுடியுமா?

**பதில்:-** வழுக்கை ஆற்றுடன் இணைக்கப்பட்டுள்ள சில குளங்கள் அதாவது உடுவில்குளம், கந்தரோ டைக்குளம், மருதடிக்குளம், கிராய்க் குளம், சுதுமலைக்குளம், சேவல்கிர மம்குளம் ஆகியன அரசசார்பற்ற உதவிவழங்கும் நிறுவனங்கள் வழங்கிய நிதியுதவியைக் கொண்டு ஆழமாக்கப்பட்டுள்ளன. அத்துடன், நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் இக்குளங்களில் துரிசுகள் நிறுவப் பட்டுக் குளத்திலிருந்து நீர் வீணாக வெளியேறாத வகையில் தடைசெய் யப்பட்டுள்ளது. குளங்களின் பாரிய வாய்க்கால்களும் புனரமைப்புச் செய்யப்பட்டு அணைகளும் தற் போது கட்டப்பட்டுள்ளன. விவசாயிக ளின் போக்குவரத்துக்கு வசதியாகப் புதிய விவசாய வீதிகளும் இப்பகுதி களில் அமைக்கப்பட்டுள்ளன. அவற் றில் முக்கியமான இடங்களில் பாலங் களும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

வழுக்கையாற்றுப் புனரமைப்புத் திட்டச் செயற்பாடுகள் தொடர்பாக நீர்ப்பாசனத் திணைக்களம் இவ் வருடம் 9 லட்சம் ரூபா நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. யாழ். மாவட்ட பெரும் உத் தியோகத்தர் எஸ்.தவராசா, மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் ரி. கணேசராசா ஆகியோர் மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்துடன் இணைந்து வழுக்கையாறு புனர மைப்புத் தொடர்பான 13 வேலைத் திட்டங்களைத் தயாரித்து இருந்த னர். இது தொடர்பாக நீர்ப்பாசனத் திணைக்களம் உரிய நடவடிக்கை எடுத்து அதன் புனரமைப்புக்கு இவ் வருடம் 9 லட்சம் ரூபா நிதி ஒதுக் கீடு செய்துள்ளதாக விவசாய சம் மேளனத்துக்கு அறிவித்துள்ளது. அதன்படி -

ஐந்து கண் மதவடியிலிருந்து வழுக்கையாற்றின் மருங்கிற்கு 800 அடிக்கு சுவர் கட்டவும், வீதியை உயர்த்தவும், வயல்களிலிருந்து தண்ணீர் ஆற்றுக்குச் செல்வதற் கேற்ற குழாய்கள் அமைக்கவும் என ஒரு லட்சம் ரூபாவும், சிராய்க்குளத் தில் வீதிவாய்க்கால் அமைக்க 40 ஆயிரம் ரூபாவும், அரசடி வீதிப் புனரமைப்புக்கு 60 ஆயிரம் ரூபா வும், கிராய்க்குளத்தின் இடிகுண்டடி யில் பாலம் அமைக்க 4 லட்சம் ரூபாவும், பண்டத்தரிப்பிலுள்ள அந் திரான்குளத்தில் பாலம்போட 3 லட் சம் ரூபா என எல்லாமாக ஒன்பது லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

எனினும், இவ்வேலைத் திட்டங் களுக்கு நிதிபோதாது என்றும், முழுத்திட்டத்தையும் செயற்படுத்தக் கூடிய வகையில் நிதி ஒதுக்கீடு செய்துதருமாறும் மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தினர் மீண்டும் கோரியுள்ளனர். ✦

**நேர்காணல் -**
**எஸ்.சாந்தகுமார்**

---

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் வவுனியா அரச வைத்தியசாலை!

(வவுனியா)

வவுனியா ஆதார வைத்திய சாலை - பொதுவைத்தியசாலையா கத் தரமுயர்த்தப்பட்டபோதும், அங்கு போதிய வசதிகள் செய்து கொடுக் கப்படவில்லை.

வவுனியா வைத்தியசாலைக்குத் தினமும் 250 முதல் 400 நோயா ளிகள் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்றுவருகின்றனர். ஆனால், இங்கு 180 கட்டில்கள் மட்டுமே உள்ளன.

வெளிநோயாளர் பிரிவு இயங் கும் கட்டடத்தைத் தவிர, ஏனைய கட்டடங்கள் பழுதடைந்தநிலையில் உள்ளன. தற்போது வைத்தியசாலை தரமுயர்த்தப்பட்ட நிலையில், நான்கு மாடிகளைக் கொண்ட மூன்று புதிய கட்டடங்கள் அமைக்கப்பட வேண் டும் என வைத்தியசாலை நிர்வாகி கள் கோரிவருகின்றனர்.

இதனைவிட, இந்த வைத்தியசா லையில் வைத்தியர்கள் பற்றாக்குறை மோசமாக இருப்பதாக மாவட்ட வைத்திய அதிகாரி சிவமோகன் தெரிவித்தார்.

இந்த வைத்தியசாலையில் கட மையாற்றுவதற்கு, வைத்தியர்கள் பின்னடித்து வருவதற்கு வைத்தி யர்களுக்கான தங்கும் விடுதிகள் இல்லாதமையே காரணமெனவும் அவர் தெரிவித்தார்.

வைத்தியசாலையின் ஊழியர் களுக்கும் பற்றாக்குறை நிலவிவரு கின்றது. கண்சிகிச்சைப்பிரிவு இங்கு இன்னமும் ஆரம்பிக்கப்பட வில்லை. அவசர சிகிச்சைப் பிரிவு இருந்தும், இங்குள்ள வசதியீனங்களால் முழு மையாகச் செயற்படாதநிலையே காணப்படுகின்றது.

# படைமுகாம் அமைப்பதற்கு நியாப் கட்டடத்தை வாங்க முயற்சி

அம்பாறை மாவட்டம் திருக்கோ வில் அதிரடிப்படை முகாமை இடம் மாற்றுவதற்காக - கள்ளியந்தீவிலுள்ள நியாப் கட்டடத்தைப் பணம் கொடுத்து வாங்கும் முயற்சிகள் நடைபெறுவ தாகத் தெரியவருகின்றது.

திருக்கோவிலில் பொதுக்கட்ட டத்தில் அமைந்துள்ள அதிரடிப் படை முகாமை இடம்மாற்றுவதற் குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த முகாமைக் கள்ளியந்தீவில் நியாப் கட்டடத்தில் அமைப்பதற்கே அதிர டிப்படை அதிகாரிகள் முடிவு செய் துள்ளார்.

ஆனால், உலகவங்கியின் உத வியுடன் நியாப் கட்டத்தில் கட்டப் பட்ட இந்தக் கட்டடத்தில், அதிரடிப் படையினரைத் தங்கவைக்க முடியா தென்பதால் - அக்கட்டடம் கட்டுவ தற்கு ஏற்பட்ட செலவுகளை வழங்க அதிரடிப்படையினர் முன்வந்திருப்ப தாகவும் கூறப்படுகின்றது.

# கோட்டைக்காடு வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் நியமனம்

அராலி, கோட்டைக்காடு கிரா மிய வைத்தியசாலைக்கு இம்மாதம் முதலாம் திகதி முதல் நிரந்தர வைத்தியராக திருமதி எஸ்.தம்பி ராஜா நியமனம் பெற்றுள்ளார்.

இதற்கு முன்னர், மானிப்பாய் அர சினர் வைததியசாலை வைத்தியப் பொறுப்பதிகாரி பேரானந்தராசா இவ் வைத்தியசாலையில் பதில் கடமை யாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் நிரந்தர வைத்தியர் இன்மையால் நோயாளர் கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வந்தனர். அப்பகுதியிலுள்ள பொது மக்கள் பொது அமைப்புக்களூடாக நிரந்தர வைத்தியரை நியமிக்கும்படி சுகாதார சேவைத் திணைக்கள பணிப்பாளருக்கு கோரிக்கை விடுத் திருந்தனர். இதன் பயனாக நிரந்தர வைத்தியர் நியமிக்கப்பட்டுள்ளார்.(118)

## முழுநிலா கருத்தரங்கு

உளவியல், ஆன்மீகம் தொடர் பான முழுநிலாக் கருத்தரங்கு இன்று பி.ப 3.30 மணிக்கு யாழ். சென். பற்றிக்ஸ் வீதியிலுள்ள "அக வொளி" நிலையத்தில் நடைபெற வுள்ளது. மேற்படி விடயம் தொடர் பாக அருட்திரு. பற்றிக் ஞானப்பிர காசம் கருத்துரை வழங்கவுள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் தொழில் நீதிமன்றம் அமைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுக்கான தொழில் நீதிமன்றம் ஒன்றினை அமைப்பதற்கு தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத் திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பல வருடங்களாகக் குடா நாட்டில் தொழில் நீதிமன்றங்கள் இயங்காததால், இங்குள்ள தொழி லாளர்களால், அவர்கள் தொழில் புரியும் நிறுவனங்கள் - அதிகாரிக ளுக்கு எதிராகச் செய்யப்பட்ட பல முறைப்பாடுகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாதுள்ளன.

ஆகவே - இப்போது இங்கு தொழில் நீதிமன்றம் ஒன்று அவசி யம் என யாழ்.மாவட்ட தொழில் திணைக்கள அதிகாரிகள் தமது தலை மையகத்துக்கும், தொழில் அமைச் சுக்கும் தெரியப்படுத்தியிருந்தனர்.

முன்னர் குடாநாட்டில் தொழில் நீதிமன்றம் இயங்கியபோது, அங்கு வழங்கப்பட்ட தீர்ப்புக்களை நடை முறைப்படுத்தும் நடவடிக்கைகளில் யாழ். மாவட்ட தொழிற்திணைக்க ளம் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக் கது. (100)

# பிரேத பரிசோதனைகளை விரைவுபடுத்த யாழ்ப்பாணத்தில் ஆலோசனைக் கூட்டம்

பிரேத பரிசோதனைகளை விரை வாக நடத்தி முடிப்பதற்கு அவசர நடவடிக்கைகளை எடுப்பதற்கான கூட்டமொன்று விரைவில் யாழ்ப்பா ணத்தில் நடைபெறவுள்ளது.


நீதிவான்களினால் கட்டளையி டப்படும் மரண விசாரணையின் ஓர் அங்கமாக இருக்கும் பிரேத பரிசோ தனை தொடர்பாக நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் - நீதிவான்கள், உயர் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சட்ட வைத்திய அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்படி விடயத்தை அமுல்படுத் துவது தொடர்பான கூட்டம் கடந்த வாரம் யாழ். மாவட்ட நீதிமன்றில் நீதிபதி த.விக்கினராஜா தலைமை யில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# தீர்வு முயற்சிகள் குறித்து தென்னாபிரிக்காவில் ஆய்வு

தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள நீதி, அரசியலமைப்பு விவசாய அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் - ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பிரதிநிதிகளுடன் பேச் சுக்களை நடத்தினார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அங்கிருந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சமாதான முயற்சிகளில் எவ்வாறு ஈடுபட்டது, சர்வஜன வாக் கெடுப்பு நடத்தப்பட்டமை மற்றும் அரசியல் தீர்வு முயற்சிகள் முன் னெடுக்கப்பட்ட முறை ஆகியன தொடர்பாகவும் அமைச்சர் பீரிஸ் - ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பிரதி நிதிகளுடன் ஆராய்ந்தார்.



காஸாவில் - பலஸ்தீனர் ஒருவர் இஸ்ரேலியப் படையின் பிடியில்

# திக்ரிட் நகரத்தின் வீழ்ச்சியுடன்

# போர் முடிவுக்கு வருகின்றதாம்!

## பிரிகேடியர் வின்செனட் புறூக்ஸ் தெரிவிப்பு

(பக்தாத்)

ஈராக்கின் திக்ரிட் நகரின் வீழ்ச்சியுடன் போர் முடிவுக்கு வந்துகொண்டிருப்பதாக, அமெரிக்க இராணுவக் கட்டளைத் தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் வின்சென்ட் புறூக்ஸ் தெரிவித்தார்.

போரில் பங்குபற்றிய அமெரிக்க யுத்தக் கப்பல்களான யூ.எஸ்.எஸ். கிற்றிஹோக், யூ.எஸ்.எஸ் கொன்ஸ்ரலேசன் என்பன தமது அணிகளுடன் இவ்வாரம் வளைகுடாவிலிருந்து திரும்புகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

சட்டம், ஒழுங்கை மீள ஏற்படுத்தும் வகையில் இராணுவப் பொலிசாரும், பொறியியலாளர்களும், சிவில் அதிகாரிகளும் ஈராக்கிற்குக் கொண்டுவரப்படுவர் என அமெரிக்கா அறிவித்துள்ளது. இதேவேளை, பிரிட்டனும் அவுஸ்திரேலியாவும் தமது சில படைப்பிரிவுகளை ஈராக்கிலிருந்து திருப்பி அழைத்துக்கொள்ளவுள்ளன.



வெறிச்சோடிய திக்ரிட் நகர்

# சிரியா மீது அமெரிக்கா பாயுமா? அரபுப் பத்திரிகைகள் கவலை!

(குவைத்)

சிரியா மீது அமெரிக்கா நடவடிக்கை எடுக்கக்கூடிய சாத்தியங்கள் உள்ளதாக, பெரும்பான்மையான அரபுலகப் பத்திரிகைகள் அச்சம் வெளியிட்டுள்ளன. இஸ்ஸாமிய உலகே இனி அச்சுறுத்தலுக்குள்ளாகலாம் எனவும் அப்பத்திரிகைகள் எச்சரித்துள்ளன.


புதிய திருப்பமாக, ஈராக் மீதான போரை ஆதரித்த குவைத் நாட்டின் தினசரிப்பத்திரிகை ஒன்று, பக்தாத்தின் வீழ்ச்சி அரபுலகத்திற்கான. ஆபத்து என்றும், அரேபியர்களின் போக்கே இதற்குக் காரணம் எனவும் குற்றஞ்சாட்டியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். .

ஈராக்கின் பின், சிரியா அதன் பின் ஈரான் என்ற நிலை தொடரவுள்ளதாக சவுதியின் அல்வத்தான் பத்திரிகை எச்சரித்துள்ளது. சிரியா, ஏனைய அரபுலகின் ஆதரவை இப்போதே திரட்டினால்தான், ஈராக்கிற்கு ஏற்பட்ட நிலை நடவாமல் தடுக்க முடியும்.

இதன்மூலமே, அமெரிக்கப் படைகள் உல்லாசப் பயணம் செல்வதுபோல் போருக்குச் செல்வதைத் தடுத்து, அவர்கள் மீது இழப்பை ஏற்படுத்தலாம் எனவும் லண்டனிலிருந்து வெளியாகும் அல்-அராபி பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்கா - அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் முழு உலகையும் ஆட்டிப்படைக்கவுள்ளதாக சூடானின் அல்-ஆம் பத்திரிகை தெரிவிக்கிறது.

# சிரியா மீதான அச்சுறுத்தலுக்கு ஐரோப்பிய யூனியனும் கண்டனம்



சிரிய ஜனாதிபதி அசாத்

(லண்டன்)

சிரியா மீதான அமெரிக்க அச்சுறுத்தலை அரபுலகுடன் இணைந்து ரஷ்யாவும், ஐரோப்பிய யூனியனும் கண்டித்துள்ளன.

சிரியா, சரியான முறையில் ஈராக் விவகாரத்தில் நடந்துகொள்ளாவிடின் அமெரிக்கா - பொருளாதார, இராஜதந்திரத் தடைகளை சிரியா மீது விதிக்கும் என எச்சரித்துள்ளது. இது, அரபுலக நாடுகளை ஒன்றன்பின் ஒன்றாக மிரட்டும் செயல் என எகிப்து தெரிவித்துள்ளது.

ஈராக்கியத் தலைவர்களுக்குச் சிரியா தஞ்சம் அளித்துள்ளது என்பதே அமெரிக்காவின் குற்றச்சாட்டு எனினும், இதைச் சிரியா மறுத்துள்ளது.

சிரியா கடந்த ஒரு வருடமாக இரசாயன ஆயுதப்பரிசோதனைகளை நடாத்தி வருவதை நாம் அவதானித்துள்ளோம் என, அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இஸ்ரேலுக்கு எதிராகத் தற்கொலைத் தாக்குதலை அறிவித்திருக்கும் பலஸ்தீனப் போராளிகள்.

# ஈராக்கில் புதிய அரசு அமைக்க அமெரிக்க நடவடிக்கை தீவிரம்

ஈராக்கில் புதிய அரசை அமைக்கும் முகமாக, ஈராக்கைவிட்டுத் தப்பியோடி வெளிநாடுகளில் வசிக்கும் ஈராக்கிய மதத்தலைவர்களையும், பழங்குடித் தலைவர்களையும் ஒன்றிணைத்து மீள ஈராக்கினுள் கொண்டுவரும் நடவடிக்கையில் அமெரிக்கா இறங்கியுள்ளது.

இது தொடர்பான நடவடிக்கை குறித்து ஆராய, நஸ்ரிய விமானத்தளத்தில் சந்திப்பு ஒன்று நடைபெற்றது. இதற்கு ஈராக்கிய எதிர்க் கட்சித் தலைவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். எனினும், இச்சந்திப்பில் கலந்துகொள்ள - ஈரானைத் தளமாகக் கொண்ட ஈராக் இஸ்லாமிய புரட்சிகர கவுன்சில் எனும் சியா குழு மறுப்புத் தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் நடவடிக்கைகளையும் அது கண்டித்துள்ளது.

இச்சந்திப்பின்போது - கூட்டம் நடைபெற்ற இடத்திற்கு வெளியே கூடிய சியா முஸ்லிம்கள், சதாமும் வேண்டாம், அமெரிக்காவும் வேண்டாம் என்று கூச்சலிட்டனர். ஈராக்கில் இடைக்கால அரசு அமையும்வரை அமெரிக்காவின் ஓய்வுபெற்ற இராணுவ ஜெனரல் ஜேகார்னா என்பவர் ஈராக்கின் தற்காலிகத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# விடுவிக்கப்பட்டுள்ள அமெரிக்க வீரர்கள்; தங்கள் அனுபவங்களை வெளியிட்டனர்



மீட்கப்பட்ட இரு போர்க் கைதிகள்

ஈராக் படைகளால் கைது செய்யப்பட்டு, தற்போது அமெரிக்கப் படைகளால் மீட்கப்பட்ட ஏழு அமெரிக்கப் போர்க்கைதிகளும், தாம் இதுவரை தமது எதிர்காலம் குறித்து நிச்சயமற்ற நிலையிலேயே இருந்ததாக செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

மூன்று வாரம் ஈராக்கின் பிடியிலிருந்த இந்த 7 பேரும், கடந்த ஞாயிறன்று வடஈராக் நகரான சமராவினுள் அமெரிக்க மரைன் படைகள் நுழைந்தபோது மீட்கப்பட்டனர்.

ஈராக் படைகள் எம்மைக் கொல்லப்போவதாகவே நாம் எண்ணியிருந்தோம் என்கிறார் சுசானா ஜோன்சன் எனும் பெண் சிப்பாய். அமெரிக்க மரைன் படைகள், நாம் அடைக்கப்பட்டிருந்த வீட்டின் கதவை உதைத்தபடி, அமெரிக்கராக இருந்தால் எழுந்து நில்லுங்கள் என்று கத்தினர். நாம் உடனடியாக எழுந்து நின்றபோது, அவர்கள் எம்மை விரைவாக அங்கிருந்து அப்புறப்படுத்தினர் என்றார் சுசானா.

எம்மை ஈராக்கியர் அடித்தாலும் எமக்குத் தேவையான மருத்துவ உதவிகளை அவர்கள் வழங்கினர். சித்திரவதை எதுவும் நடக்கவில்லை. நான் என் மனைவியை இனிப் பார்க்கமாட்டேன் என்றே எண்ணினேன் என்கிறார், டேவிட் வில்லியம்ஸ் என்ற கனிஷ்ட நிலை அதிகாரி.

ஒரு முறை அமெரிக்கா வீசிய குண்டினால் நாம் தங்கியிருந்த



மீட்கப்பட்ட வீரரின் பெற்றோர்



பெண்சிப்பாய் சுசானா அழைத்துவரப்படும் காட்சி

வீட்டின் ஒரு பக்கச்சுவர் இடிந்தது. நாம் அதனூடாகத் தப்பியோட முனைந்தபோது, அங்கு காவலில் நின்ற ஈராக்கியர் எம்மைத் தடுத்துவிட்டார். நாம் மீட்கப்பட்டும் பக்தாத் வீழ்ந்த செய்தி எமக்குத் தெரியாதிருந்தது என்று குறிப்பிட்ட இந்தப் படைவீரர், தாம் கைதான சம்பவம் குறித்தும் விபரித்தார்.

எமது வாகன அணி கடும் மணற்புயலில் சிக்கியபோது எம்மை ஈராக்கியர் சுற்றிவளைத்தனர். மணற்புயலினால் துப்பாக்கிகள் செயலிழந்திருந்ததால் நாம் சரணடைய முடிவெடுத்தோம் என்கிறார், 507 ஆம் விநியோக அணியின் வீரர் ஒருவர். இதன்போது 9 அமெரிக்க வீரர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அப்பாச்சே ஹெலிகொப்ரர் சுட்டு வீழ்த்தப்பட்டபோது கைதான விமானிகளான டேவிட் வில்லியம்சும் ரோனால்ட் யங்கும் தமது அனுபவத்தை விபரிக்கையில்- அப்பாச்சே ஹெலி வீழ்ந்ததும் நாம் தப்பியோடிச் சென்று, அருகிலிருந்த பாரிய வாய்க்கால் ஒன்றினுள் குதித்து நீந்தத் தொடங்கினோம். எனினும், ஓரிடத்தில் கரையேறியபோது எம்மைச் சுற்றிவளைத்த ஆயுதம் தாங்கிய ஈராக்கிய விவசாயிகள், எம்மைத் தடியால் தாக்கினர். ஒருவர் கத்தியைக் கழுத்தருகே பிடித்தார். லொறி ஒன்றினுள் எம்மை ஏற்றி ஈராக்கியர்களுக்கு காட்சிப் பொருளாக எம்மைக் காட்டிச் சென்றனர் என்றார்.



தடுத்துவைக்கப்பட்டிருந்தபோது...

எவ்வாறாயினும் இந்த அமெரிக்கப் போர்க்கைதிகள் எவ்வாறு மீட்கப்பட்டனர் என்பது குறித்து இன்னமும் தெளிவான தகவல்கள் வெளிவரவில்லை. ஈராக்கியப் படையினர் கொடுத்த தகவலிலேயே

உலகவலம்

இவர்கள் மீட்கப்பட்டதாக ஒரு தகவலும், பொதுமக்களே இவ்விடத்தைக் காட்டிக் கொடுத்ததாக மற்றுமோர் தகவலும் தெரிவிக்கின்றன. தமது உறவுகள் மீட்கப்பட்ட மகிழ்வில் இவர்களது தாய், தந்தையர் விருந்துகளை ஏற்பாடு செய்து வருகின்றனர்.

போரின்போது காணாமற்போனோர் பட்டியலில் - இன்னமும் ஆறு அமெரிக்கப் படைவீரர்கள் உள்ளதாக பென்ரகன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

**மலேசியா/பிரித்தானியாவில் உயர்கல்வி**

★ பாடநெறி ஆரம்பம் மே/யூன் 2003
★ ஆகக்குறைந்த தகைமை (G.C.E. O/L)
★ பாடநெறிக் கட்டணத்தை இலகுவாக தவணைமுறையில் செலுத்தலாம்.
★ விசா ஒழுங்குகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

இன்று (16.04.03) பின்வரும் யாழ். முகவரியில் நீங்கள் சந்திக்கலாம்

S.M.THALHA (Consultant)
30 1/1, சிராம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
Tel:- 0777-578059
072-859041
(சி-765)

# காணாமற்போனோர் தொடர்பாக மீண்டும் விசாரணை ஆரம்பம்

யாழ்.மாவட்டத்தில் காணாமற்போனோரில் 94 பேர் தொடர்பான விசாரணைகள், மனித உரிமை ஆணைக் குழுவினரால் மீண்டும் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்விசாரணைக்காக கொழும்பிலிருந்து மனித உரிமை ஆணைக் குழுவின் விசாரணைக் குழுவின் நான்கு பேர் கொண்ட உயர் அதிகாரிகள் குழு நேற்றுக் காலை யாழ். வந்தனர்.

இவ்விசாரணைகள், நேற்று யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெற்றன. இன்று, உடுவில் பிரதேச செயலகத்திலும் நாளை, மீண்டும் யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்திலும் இவ்விசாரணைகள் தொடர்ந்து நடைபெறும்.

அத்துடன் - இவ்விசாரணைகள் எதிர்வரும் 19ஆம் திகதிவரை நடைபெறவுள்ளதாகவும் தெரியவருகிறது. (ரா)

# மக்கள் கருத்தறிந்த பின்பே தீர்வுத்திட்டம் முன்வைப்பு!

## தென்னாபிரிக்காவில் பீரிஸ் தெரிவிப்பு

சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்கள் கருத்தினை அறிந்ததன் பின்னரே, இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் முன்வைக்கப்படும் என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

தற்பொழுது தென்னாபிரிக்காவில் தங்கியுள்ள அமைச்சர் பீரிஸ், தென்னாபிரிக்க அரசியல் திட்டம் தமக்கு நல்லதொரு பாடத்தினைத் தந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தென்னாபிரிக்காவைப்போல் அடிமட்ட மக்களின் அபிலாஷைகளை உள்வாங்கியே, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முன்வைக்கப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (01)

# ரோக்கியோ உதவி மாநாட்டில் இந்தியா பங்குபற்ற மாட்டாது

வொஷிங்ரன் மாநாட்டில் இந்தியா கலந்துகொண்டபோதிலும், ரோக்கியோவில் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கான வாய்ப்பு இல்லை என இந்தியா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரோக்கியோ மாநாட்டிற்கு விடுதலைப்புலிகள் அமைப்பின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளதால், அதில் பங்கேற்க இந்தியாவிற்கு ஆர்வம் இல்லையென இந்திய அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். விடுதலைப் புலிகள் இம் மாநாட்டைப் பகிஷ்கரிப்பர் என்று தாம் கருதவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

முன்னதாக, வொஷிங்ரன் மாநாட்டிற்குத் தம்மை அழைக்காததை ஆட்சேபித்து, விடுதலைப் புலிகள் ரோக்கியோ மாநாட்டில் பங்குபற்றுவது பற்றி மறுபரிசீலிக்கப்போவதாக அறிவித்திருந்தமை தெரிந்ததே.

### மீளக்குடியமர்ந்த...

பவுசர்மூலம் நீர் விநியோக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன்-

நீண்டகாலமாகவே பழுதடைந்துள்ள நெடுந்தீவு இறங்குதுறையை மிக ஆழமாக்கி, நவீன முறையில் புனரமைத்தல் போன்ற திட்டங்களும் செயற்படுத்தப்படவுள்ளன.

அத்துடன், முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள முஸ்லிம் பள்ளிவாசலை, அப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களின் வழிபாட்டிற்காகத் திறந்து விடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ரா)

### முஸ்லிம்......

இக்கடத்தல் சம்பவத்துக்குத் தீர்வுகாணும்வரை, மூதூரை விட்டு வெளியேறப்போவதில்லை என அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார். முஸ்லிம்களை அரசு ஏமாற்றுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இதனிடையே, இக்கடத்தல் சம்பவம் குறித்த விசாரணைகள் மேற்கொள்ளும் பொருட்டு கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சன், மாவட்டக் கண்காணிப்புக்குழுத் தலைவர் அப்துல் புர்ஹான் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா, இராணுவப் பிரிகேடியர் சகீந் ஆகியோர் விசேட ஹெலிகொப்ரரில் மூதூர் வந்துள்ளனர். இது தொடர்பாக அனைத்துத் தரப்பினருடனான விசேட கூட்டம், இச்செய்தி எழுதும் வரை மூதூர் - அக்கரைச்சேனை பள்ளிவாசலில் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று அங்கு புலிகளைச் சந்திக்கவும் திட்டமிட்டுள்ளனர். (04)

### இருமொழி....

எடுக்கப்பட்டதாக பரீட்சை ஆணையாளர் அநுர விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆங்கில மொழிமூல வினாத்தாளில் ஏற்படும் சந்தேகங்களை இதன்மூலம் தீர்த்துக்கொள்ளமுடியும். இத்தகைய வசதியை பரீட்சைத்திணைக்களத்தின் வரலாற்றில் இப்பொழுதே முதற்தடவையாக வழங்குகின்றோம் என திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆங்கிலமொழி மூல பரீட்சைக்கு தோற்ற, முன்னதாக கல்வித்திணைக்களம் மாணவர்களுக்கு அனுமதியளித்திருந்தது. ஆனாலும் பரீட்சை மண்டபத்தில் வைத்து மொழிமூலத்தை மாற்ற முடியாது என்றும் பரீட்சைத் திணைக்களம் முன்பு அறிவித்திருந்தது.

எனவே, இத்தகைய அனுமதியை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவேண்டும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

### ஆஜர் செய்யப் பணிப்பு

கைதடி சைவச்சிறுவர் இல்ல விவகாரம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டுள்ள விடுதிப் பொறுப்பாளர் உட்பட மூவரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர் செய்யும்படி பொலிஸாருக்கு, சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

### புலிகளுக்கு.....

கள் இயங்கி வருவதாகவும், சமாதானத்தை முழுமையாக ஏற்படுத்தும் நோக்கில் நாங்கள் இதய சுத்தியுடன் செயற்பட்டுவரும் இந்தக்கால கட்டத்தில், விடுதலைப் புலிகளுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கில் பல தீய சக்திகள் செயற்பட்டு வருவதைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். இவ்வாறான குழுக்கள் இருப்பதனால்தான், தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்பதைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் அங்கு வலியுறுத்தினார்.

## 45 அபிவிருத்தி...

பிக்கப்பட்டன.

இதில் 45 திட்டங்களுக்குச் சிறானின் அனுமதி கிடைத்தது. இதில் 40 திட்டங்கள் சிறான் மூலமும் 5 திட்டங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. 14 திட்டங்கள் குறித்து மேலதிக விபரங்கள் தேவைப்படுவதால், அவை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படவுள்ளன. இதன்படி - சிறான் மூலம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள 40 திட்டங்களுக்கு 1073 மில்லியன் ரூபாயும், மேலதிக 16 திட்டங்களுக்கு அரசசார்பற்ற நிறுவனம் மூலம் 1330 மில்லியன் ரூபாயும் ஒதுக்குவதென இக்கூட்டத்தில் சிபார்சு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில்- யாழ். மாவட்ட சிறான் இணைப்பாளர் ரட்ணம், முஸ்லிம் தரப்புப் பிரதிநிதி முபீன், யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, தமிழீழ நிர்வாக சேவைத் துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரன், யாழ். மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் விஜிதரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (...)

**RAMCO CEMENT**
**ராம்கோ சீமெந்து**
MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT

இலங்கையில் மட்டுமா இல்லை — இந்தியாவில் மட்டுமா இல்லவே இல்லை

ஆசியாவின் முதலாம் தர (நம்பர் 1) தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் சீமெந்து, ராம்கோ சீமெந்து (கோபுர மார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இந்தியாவில் விற்பனையில் முதல்தர சீமெந்து ராம்கோ சீமெந்து**

SLS - 107 அங்கீகாரம் பெற்றது
ISO - 9002 தரம் பெற்றது
BSS - 12 - 1991 தரத்திற்கு அமைவானது

தற்பொழுது ராம்கோ சீமெந்து பருத்தித்துறை இறங்குதுறையில் இறக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

குறிப்பு: ★ முன்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும்.
★ குடாநாட்டு மக்களின் பல கோடிரூபாய் பணத்தை மீதப்படுத்திய முதலாம் தர சீமெந்து ராம்கோ சீமெந்து.

ராம்கோ சீமெந்து ஏக இறக்குமதியாளர்கள்
**ஈஸ்வரபகவான் & கொம்பனி**
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. NO: 021 - 2222350
(சி-847)

கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும்
தமிழகத்தின் பிரபல பின்னணிப் பாடகியும் தமிழ் இசைப் பாடகியுமான
**ரீ.கே.கலா**
தமிழீழ இசைக் கலைஞர்களுடன் இணைந்து வழங்கும்
மாபெரும் தமிழ் இசை மாலை
இடம்: யாழ்.வீரசிங்கம் மண்டபம்
காலம்: 16.04.2003 இன்று (புதன்) பி.பகல் 4.00மணி.
நமது ஈழநாடு
ராம்கோ சீமெந்து



இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.